உ

ஜோதிமயம்.

# இரஞ்சித போதினி

கதை, காவ்யம், சரித்திரம், நவீனம், புராணம், இதிகாசம்
அனுபவ முதலிய விஷயங்களைப் புனைந்துகொண்டு
வெளிவரும் ஓர் மாதந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

"தொட்டனைத் தூறு மணற்கேணி, மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு." (திருவள்ளுவர்.)

ஆசிரியர் :—தமிழ்ப்பூஷணம் ஸ்ரீ வாசுதேவ ராவ் கேய்க்வார்.

| | | |
|---|---|---|
| தொகுதி 2 | இரக்தாக்ஷி௵ தைமீ<br>1925௵ ஜனவரிமீ | பகுதி 12 |

## கடவுள் வணக்கம்.

உழைவாண் மழுவெம் படையாய் சரணம்
ஒளிசே ரிதழித் தொடையாய் சரணம்
மிழையார் புரிநூ லணிவாய் சரணம்
மெலியாய் வலியாய் சரணஞ் சரணம்
குழைபார் செவியார் சரணஞ் சரணம்
குறியோர் குணமில் லவனே சரணம்
கழைமே வியதோ ளுமையா ளுறையுங்
கருணா நிதியே சரணஞ் சரணம்

## நூதன புத்தக விளம்பரம்

திருவேங்கிட நாதர் திருவுலா.
ஸ்ரீ ஆளவந்தார்சுவாமிகள் இயற்றிய காவியம் விலை அணா-4

திருப்பாவை.
ஸ்ரீ ஆண்டாளம்மையார் இயற்றிய முப்பது பாசுரங்களுக்கும்
அந்தரார்த்த பாஷ்யம். (உரையுடன்) விலை அணா 3

மானேஜர்:— இரஞ்சித போதினி ஆபீஸ்,
சௌகார்பேட்டை, சென்னை,

# இரஞ்சித போதினி

இரக்தாக்ஷி௵ தை௴—1925௵ ஜனவரி௴

## நமது சந்தா நேயர்களுக்கோர் விஞ்ஞாபனம்.

அன்பின்மிக்க ஐயன்மீர்!

கடந்த இரண்டு ஆண்டுகளாக நமது இரஞ்சிதன் ஆரம்பமாகி இம்மதியோடு இரண்டாம் ஆண்டு பூர்த்தியெய்துகின்றது. அடுத்த மாசி௴ முதல் நமது இரஞ்சிதனுக்கு மூன்றும் ஆண்டு ஆரம்பமாகின்றது. கடந்த இரண்டு ஆண்டுகளாக இரஞ்சிதனுக்கு ஏற்பட்ட தொல்லைகளும் செலவுகளும் கணக்கிலடங்காவேனும் இறைவன் திருவருளால் இடையூறுகளினின்றும் இரஞ்சிதன் உதயமாவதை யொழித்தானில்லை. இனி மூன்றும் ஆண்டுமுதல் இரஞ்சிதன் தன் பூரணப்பொலிவுடன் பிரகாசிக்குமாறு ஒவ்வொரு சந்தா நேயரும் தத்தம்மா லியன்றளவு இரஞ்சிதனுக்கு சகாயம் புரிந்து ஒன்றிரண்டு புதிய சந்தாதாரர்களைச் சேர்த்து நாளது 1925௵ பிப்ரவரி௴ 15உக்குள் தங்கள் தங்கள் சந்தாதொகைகளையும் மணியார்டர்மூலம் அனுப்பி யாதரிப்பதுடன் புதிய சந்தாதாரர்களின் தொகையையும் அனுப்பி யாதரிக்குமாறு மிகவும் வணக்கத்துடன் கேட்டுக்கொள்ளுகிறோம். நிற்க, கடந்த மார்கழி மாதத்தில் நமது இரஞ்சிதனின் ஆசிரியர் ஸ்ரீமான் வாசுதேவராவ் கேய்க்வார் அவர்கள் தேகசுகமில்லாத காரணமாக பத்திரிகை அதிக காலந்தாழ்ந்து பிரசுரமானமைக்கு மிக்க வருந்துகின்றோம். தற்சமயம் கொஞ்சம் கொஞ்சமாக குணப்பட்டு வருவதுடன் ஜனவரி௴ சஞ்சிகையையும் மேற்பார்த்து அச்சிட்டு வந்தமைக்கும் நம் மனமார்ந்த வாழ்த்துதலை முழுமுதற் பரம்பொருளுக்குச் செலுத்துகின்றோம்.

இனி பிறக்கும் புதிய ஆண்டின் சந்தா தொகையை நமது ஆபீசிற்கு 15-2-25 க்குள் சேரும்படியும், ஒவ்வொரு புதிய சந்தாதாரரைச் சேர்த்து உபகரிக்கும்படியும் மிகுதியும் தங்கள் மேலான கனத்தை மிகவும் பிரார்த்திக்கின்றோம்.

குறிப்பு:— 1925௵ பிப்ரவரி௴ 15உக்குள் சேராத சந்தாவுக்கு நமது 3-வது ஆண்டு முதல் பத்திரிகையை வி. பி. பி. யில் அனுப்பப்படும், அதை மறுதளிக்காமல் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுதும். பத்திரிகை வேண்டாதவர்கள் ௸ தேதிக்குள் தெரிவித்துவிடின் எமக்கு நஷ்டமென்பதில்லா தொழியும் என்பதை கவனிக்கவேண்டுகிறோம். நமது இரஞ்சிதனை அன்புடன் ஆதரணை செய்து மேன்மேலும் விருத்தியடையச்செய்ய வேண்டுமாய்க் கோருதும்.

பத்திராதிபர்.

## ஸ்வயராஜ்யத்தின் சூக்ஷமம்

## VI

### (எ) தாழ்ந்தவகுப்பார்களை ஆதரணை செய்யவேண்டியது

மஹாத்மா காந்தியடிகள் தாழ்ந்தோரை உயர்த்த வேண்டுமென்று முன்னரும் கூறியுள்ளார். தற்சமயம் நடந்த பெல்காம் காங்கிரசிலும் கூறியுள்ளார். அவர் நோக்கமானது தாழ்ந்தோரை தாழ்ந்த ஸ்திதியினின்றும் உயர்ந்த ஸ்திக்குக்கொண்டு வரவேண்டுமென்றதாக இராமல் அவர்களைச் சரிசமானமாகவும், கொள்வினை கொடுப்பினைக்கும் பந்திபோஜனத்திற்கும் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்றும் கூறினாராயின் அவரை நாம் மதத்தில் பற்றற்றவரென்றே கூறவேண்டும். தாழ்ந்தோர்களை பூர்வத்தில் புறக்கணித்து ஒதுக்கியது எதனால் என்பதை காந்தியடிகள் ஸ்வயராஜ்ய அவசரத்தில் கவனிக்காதது அவரது அதி தீவிரத்தைக் குறிக்கின்றதாயினும் ஒவ்வொரு இந்தியனுக்கும் மதமே பெரிது. அதிலும் ஆசாரமேபெரிது. ஆசாரத்தைக்கைவிட்டு அசுத்தத்தையே பெரிதாகக்கொண்டுள்ளவர்களை யத்தீயவழியினின்றும் விலகி நல்வழிக்கு வருமாறு நாம் போதித்து தினே தினே யவர்களை சீர்திருத்தமடையச் செய்வதுடன் அவர்களுக்கு தேசபாஷையையும், தேசபக்தியையும் புகட்டி வரவேண்டும். அங்ஙனம் செய்து வருவோமாயின் அவர்களும் சீர்திருந்தி நாளாவட்டத்தில் நல்வழிக்குவந்து விடுவார்கள். அவர்களை எவ்வாறு சீர்திருத்துவது எனின்,

(அ) தாழ்ந்தோரை பக்ஷமாய் நடத்தவேண்டும்.

(ஆ) அவர்களிடம் உரையாடும்போது "கீழோராயினும் தாழ உரை" யென்னும் மூதாட்டியின் மொழியைக் கடைபிடித்து சாந்தமாய் உரையாடவேண்டும்.

(இ) அவர்களைப் பிரதிதினமும் வஸ்திரங்களைத் தோய்த்து ஸ்நானம் செய்யும்படியும் நெற்றியில் திலகமணியும்படியும் செய்ய வேண்டும்.

(ஈ) அவர்கள் செய்யும் தாமத பூஜைகளான பலியிடு முதலியவற்றையும் புலாலுண்ணலையும் ஒழிக்குமாறு உபதேசித்து வரவேண்டும்.

(உ) அவர்களுக்கு தேசியமுறையில் தேசபாஷாபி விருத்தியுண்டாக கல்வி நிலையங்கள் ஸ்தாபித்து போதித்து வரவேண்டும்.

(ஊ) அதிகவயதானவர்களுக்கு அவர்கள் மனதில் நன்றாய்ப் படும்படி நமது தேசவிஷயங்களையும், முன்னோர்களின் வீரதீரபராக்கிரமங்களையும், அவர்களின் பக்தியையும் எடுத்துக்கூறவேண்டும்.

(எ) அவர்கள் குடியிருக்கும் இடங்களைச் சுத்தமாக வைத்துக் கொள்ளும்படியும், அவர்களின் ஸ்திரீகள் தொழில் நேரம்போக ஆண் பெண் இருபாலரும் நூல் நூற்றுவரும்படியும் செய்யவேண்டும். அதோடுகூட அவர்களால் நூற்கப்படும் நூலை நம்மவர்கள் வாங்கவும் வேண்டும். இதல்லாமல் வேறு கைத்தொழில்களிலும் அவர்களைப்பழக்கவேண்டும் முக்கியமாய் கிராமாந்தரங்களில் வசிப்பவர்களையும் அப்படி பழக்க முற்படவேண்டும்.

இவ்விதம் செய்துவந்தால் அவர்களும் சுத்தமாயும் ஆசாரமுடையவர்களாயும் முன்னேற்றமடைவார்கள். இதுதான் நாம் தாழ்ந்தோரை ஆதரிக்கவேண்டிய முறையாகும்.

## (ஏ) விவசாயம் அவசியம்.

நமது நோக்கத்தின் அடிப்படை விவசாயத் தொழிலேயாகும். நமது நாடு தற்சமயம் க்ஷீணதசை யடைந்துவிட்ட தென்றே கூற வேண்டும். இவ்விதம் ஏற்பட்டதற்கும்—ஏற்படுவதற்கும்—ஏற்பட போவதற்கும் காரணமாகின்றனர். அவர்கள் தொழிலாளிகளைச் சரிவர பராமரிக்காமலும் தம்தொழிலின் மாட்டுக்கமின்மையும், விவசாயத்தொழிலுக்கு நூதன கருவிகளைக் கண்டுபிடிப்பதிலும், நூதன முறையில் பயிரிடுவதற்கும் பிரவேசிப்பதைவிட பண்டையமுறையே போதுமானதாகுமென்றுகூறுவது பொருத்தமாகுமெனினும், நூதன முறையும் வேண்டுவதுதான். ஆனல் தற்காலம் கால மழையில்லாமையினல் மிகுந்த கஷ்டம் என்று பலர் கூறலாம். அது தவறு என்றே நாம் கூறுவோம்.

நம்மவர்கள் ஆசார அநுஷ்டானங்களை மறந்து பொருமையெனும் பேய்வாய்ப்பட்டு "அயல் வாழ்ந்தால் ஐந்துநாள் பட்டினி" யென்பதொப்ப தம்மிடம் விளைந்து வந்திருக்கும்படியான தானியத்தை அதிக விலைக்கு விற்றும் அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தும் திரவியத்தைக் குவித்துவைக்க வேண்டுமென்றும் எண்ணுவதினலேயே யவ்வெண்ணம் ஈடேறுவதில்லை. 'நாமொன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைக்கும்' என்னும் முதுமொழியைக் கடைப்பிடித்து தருமநெறியிலேயே நோக்கம் செலுத்தி வாழவேண்டும். அதுதான் என்றைக்கும் சாஸ்விதமாக நிலைக்கும். 'பிறருக்கு நினைக்குங்கேடு தனக்கு' என்பதொப்ப, நாம் நம் நாட்டவர்களையே வஞ்சித்துப் பொருள்பறிக்க எண்ணினல் நம்மை வஞ்சித்துப் பொருள் பறிக்க வேறுபலரும் இருப்பரென்பது கூறவும் வேண்டுமோ? நவீன நாகரீகத்தின் வயப்பட்டு புராதனமான தொழிலான விவசாயத்தை மறந்தால் நமது நாடு பொருளாதார நிலையில் குன்றி க்ஷீணத்தையே யடையுமன்றோ? ஆகையினல் இராஜீயவாதிகளும் ஸ்வயராஜ்யக்கட்சியாரும், காங்கிரஸ்காரர்களும் இத்தகைய கஷ்டத்தை நிவர்த்தி செய்ய இதுவரையில் எடுத்துக்கொண்ட முயற்சிகளென்ன? ஒன்று

மில்லையென்றே கூறவேண்டும். எடுத்த காரியத்திற்கு அஸ்திவாரம் பலமில்லையாயின் நாம் கொண்டகாரியம் சித்தியெய்தாதன்றோ? நமது நாடு முன்னேற்றமடையவும் கைத்தொழிலபிவிருத்தியும் விவசாய மும்மை..முக்கியமானவைகளாகும். ஆதலினல் அவைகளின் முன்னேற்றத்தைக்கருதி நம் நாட்டின் நிலைமையைக் கவனிக்குமிடத்தில் இந்தியப்பொருளாதார சாஸ்திரிகளின் 8-வது மகாநாட்டில் நடந்த சில விஷயங்களை இவண் குறிப்பிடுதும். அதனல் நமது நாட்டின் நிலமை நன்கு விளங்காமற்போகாது: “நமது சகோதரர்களில் பலர் தரித்திரத்தில் மூழ்கிக் கிடக்கிறார்கள். பட்டினி அவர்களை வாட்டு கின்றது. நமது தேசம் தரித்திர நிலைமைக்கு ஆளாயிருக்கிறது. சராசரி வரும்படியிலும் சரி, பொதுவாக உள்ள செல்வத்திலும் சரி, இந்தியா மற்றநாடுகளுக்கு மிகவும் பிற்பட்டிருக்கின்றது. நமக்கு கதிமோர்ட்சமேயில்லையென்று குக்கிராமங்களில் இருப்பவர்களில் பலர் உண்மையில் நினைக்கிறார்கள். தரித்திரநிலையில் இருக்கிறோமே என்ற உணர்ச்சிகூட போய்விடும்படி அவ்வளவு காலமாக தரித்திரத்தில் ஆழுந்து கிடக்கிறார்கள். தரித்திரம் சகஜமாகிவிட்டது.

இத்தகைய நிலைமை நம்மைவிட்டொழிந்தாலன்றி நமக்கு க்ஷேமம் ஏற்படாதன்றோ? க்ஷாமமொழிந்து க்ஷேமப்படவேண்டுமாயின் அரசாங்கத்தார் முதல் சகலரும் பாடுபட்டேயாகவேண்டும். இதற்கு முக்கியமாய் நாம் செய்யவேண்டியது என்னவெனின் நாட்டில் பஞ்சம் பரவாவண்ணம் தடுக்கவேண்டும். இதுபற்றி ஸ்ரீ காசியில்கூடிய பொருளாதார ஆராய்ச்சி மகாநாட்டில் அக்ராசனர் கனம் லல்லுபாய் ஸமால்தாஸ் அவர்கள்கூறியதின் சாராம்ஸமாவது.

“ஒரு தேசத்தின் பொருளாதார நிலைமை அதன் கைத்தொழிலபிவிருத்தியை வெகுதூரம் பொறுத்திருக்கிறது விவசாயம் ஒரு முக்கியமான தொழிலாக இந்நாட்டில் இருந்து வருகிறது. 100-க்கு 65 முதல் 85 பேர் வரையில் அதனல் ஜீவிக்கிறார்கள். விவசாயிகளின் தற்போதைய நிலைமையை ஆராயாமல் எந்த விசாரணையும் பூர்த்தியாகாது. விவசாயிகளின் நிலைமையை விருத்திசெய்ய வழி தேடவேண்டும். விவசாய இயந்திரங்கள் இல்லாமையும் நிலங்களை சப்டிவிஷன் செய்தலும், சாஸ்திர ஞானக்குறைவும், கடன் வாங்க சக்தியற்றிருத்தலும், விவசாயிகளின் கேவலநிலைமைக்குச் சிலமுக்கிய காரணங்களாகும். நிலவரி முறையைப் பரிசிலனை செய்யவேண்டும் நிலவரி ஒரு வரியா வாரமா என்பது ஒருவிதமாகத் தீர்ந்து போக வேண்டும். வரியாயிருந்தால் சொற்ப நிலமுள்ளவர்கள் விஷயத்தில் ஏன் விதிவிலக்குச் செய்யவில்லை? நிலத்தில ஈடுபட்டவர்களுக்கு வருமான வரிவிதிக்காமல், கைத்தொழில் முதலிய இனங்களில் வேலை செய்வோருக்கு ஏன் வருமான வரி விதிக்கவேண்டும்? ஆகையால் தான் பணக்காரர்கள் பணத்தை நிலத்தில் போடுகிறார்கள். விலையும்

அதன் பலனாக அதிகரித்து விடுகிறது. அளவுக்கு மிஞ்சின குத்தகைவிட்டு ஈடுசெய்ய முயற்சி நடக்கின்றது. சிறிய நிலச்சுவான்தார்களுக்கும் வரி விஷயத்தில் வித்தியாசமில்லை. சொற்ப நிலமுள்ளவர்கள் மிகுதியும் கஷ்டப்படுகிறார்கள். சாஸ்திர ரீதியில் வரிவிதிக்கவில்லை. ஹிந்துலாப்படி பாத்தியங்கொண்டாடுவார்களே யென்று பயந்து வரி விசாரணைக்கமிட்டியார் சும்மா விட்டு விடக்கூடாது. பூமியின் வளப்பத்தைத் தக்கபடி உபயோகிக்கப் பலருக்குத் தெரியவில்லை. ஆசார சீர்திருத்தக்காரர்கள் ராஜியத் தலைவர்கள் உள்பட எல்லோரும் இத்தகைய விஷயங்களில் சிரத்தை காட்டினாலன்றி திடமானவழி பிறக்கப்போகிறதில்லை. சமயத்தில் பணங்கிடைப்பது ஏழை விவசாயிகளுக்குக் கஷ்டமாயிருப்பதால் நிலத்தைப் பண்படுத்த அவர்களுக்கு சக்தியில்லை. கூட்டுறவுசங்கங்களால் இன்னும் போதிய அனுகூலம் ஏற்பட்டதாகச் சொல்ல முடியாது. நிலவரி மூலமாக கவர்ன்மெண்டார் பெரும் தொகை சம்பாதிக்கையில் அவர்கள் ஏன் விவசாயிகளின் நிலைமையை விருத்திசெய்ய முயலக்கூடாது? டில்லீ ஸிம்லாவிலுள்ளவர்களுக்கு சாமான்ய பிரஜைகளின் கஷ்டம் தெரிவதில்லை. பெரிய கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்கள் சரியானபடி தம் கடமையைச் செலுத்துவதில்லை கூட்டுறவு பாங்கிகளுக்கு இம்பீரியல் பாங்கி வசதி செய்து கொடுப்பதை ஏன் ஆட்சேபிக்க வேண்டும். இத்தகைய அசிரத்தை இருக்கிற வரையில் விவசாயிகளின் நிலைமை சீர்திருந்தப் போகிறதில்லை. நில ஜாமீனில் கடன் கொடுக்கும் பாங்கிகள் ஏற்படுத்த வேண்டும். சௌகார்களின் கையில் விவசாயிகள் சிக்கும்படி செய்யக்கூடாது. நிலங்களை சப்டிவிஷனல் செய்வதால் வேலையில்லாத திண்டாட்டம் ஏற்படுகிறது. குடிசைத் தொழில்களை விருத்திசெய்து, வேலையில்லாதவர்களை வேலைகிடைக்கக்கூடிய இடங்களுக்கு உள் நாட்டிலேயே அனுப்பி, விவசாயத்தையும் விருத்தி செய்யச்சொன்னால் நிலைமை ஓரளவு சீர்திருத்தக்கூடும். வேலையில்லாத் திண்டாட்டத்தைப்பற்றிய புள்ளி விவரங்கள் தயாரிப்பதில்லை. புதிய கைத்தொழில்களில் எத்தனை பேருக்கு வேலை கிடைக்குமென்று கணக்கிடவேண்டும். வேலைக்காரர்களின் வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தீர்ப்பதுதான் சிரமமாயிருக்கும், கவர்ன்மெண்டின் கல்வி முறை வெகுதூரம் இந்தத் திண்டாட்டத்திற்குக் காரணம் தொழிற் பாட்சாலைகள் எங்கும் ஏற்படுத்தபடவேண்டும். கைத்தொழில் முதலாளிகளும் ராஜீயவாதிகளும் கல்வி நிபுணர்களும் கவர்ன்மெண்டும் இந்த விஷயத்தில் ஒத்துழைத்தாலன்றிப் பரிஹார மேற்படாது இந்தியக் கைத்தொழில்களைப் போட்டியிலிருந்து காப்பாற்ற அதிகமான முயற்சியெடுத்துக்கொள்ள வேண்டும். அரைகுறையாகவும் அரைமனதுடனும் காப்பளிப்பதில் பயனில்லை போதியவளவு தொழிற்பயிற்சி ஸ்தாபனங்கள் ஏற்படுகிற வரையில் கவர்ன்மெண்டார் மற்றநாடுகளிலா

வது தொழிற்பயிற்சி பெற்றுவர சகாயம் செய்து வரவேண்டும். பாங்கி வசதிகள் போதியவளவு இருந்தாலன்றி கைத்தொழில் முன்னுக்கு வராது. இந்தியாவின் பணம் இங்கிலாந்தில் இராதபடி பார்த்துக்கொண்டால், பணத்தட்டு அதிகமாயிராது."

ஆதலினால் நம்நாட்டு நிலச்சுவான்தாரர்கள் மேற்கண்ட விஷயங்களை யநுசரித்து இனியேனும் நமது நாட்டில் உள்ளவர்களை யாதரிக்கத் தொடங்கி யவர்களுக்குத் தகுந்தபடி செய்து வருவார்களாயின், மற்றவர்களும் இதற்கு உட்பட்டு நம் நாட்டுப் பொருளாதாரநிலையை சீர்செய்வார்கள். அவர்கள் செய்யுமுன் நாம் நமது கடமையைச் செய்யத் தவறலாகாது பிறர்கையை எதிர்பார்ப்பதினும் தன்கையே தனக்குதவியென்னும் முதுமொழியைக் கவனித்து ஏழைத் தொழிலாளிகளைச் சீர்செய்தும் எளியகுடித்தனக்காரனுக்குப் பொருளுதவியும் வருவதோடு தன்நாட்டு மக்கள் அந்நியநாடுசென்று அவஸ்தைப் படாவண்ணம் ஆதரவளித்தும், தானியங்களை அகவிலைக்குவிற்க விரும்பாமல் சபதமாகவே விற்றும், அன்னியநாடுகளுக்கனுப்பி நம் நாட்டவர்களை பட்டினிக்குள்ளாக்காமலும் இருக்கப் பாடுபடுவதுதான் சுயராஜ்யமடைவதற்கு சுருக்கமுறையாகும். பிற மறுமுறை தொடர்வோமாக.

V. R. G. ஆசிரியர்.

## இராமச்சந்திரன் கானேக்கிச் செல்வதைப்பற்றி நிகழ்ந்த ஆக்ஷேபனை ஸமாதானங்கள்

அல்லது

## பகவத்கீதோபதேசம்

(407-ம் பக்கத் தொடர்ச்சி)

குழந்தையான ராமச்சந்திரனுடைய மன உறுதியைக்கண்டு "நாம் இனி வியசனப்படுவதில் பயன் சிறிதுமில்லை" என்று கண்ணீரைக் கீழே விழவொட்டாமல் தேக்கிக்கொண்டு மகா தர்மிஷ்டரான ராமரைப்பார்த்து கௌசல்யாதேவியார் "என் வயிற்றில் தசரதச் சக்கிரவர்த்திக்குக் குழந்தையாய்ப்பிறந்தவனும், ஸகலமானவர்கட்கும் பிரியத்தையே செய்கிறவனும், கஷ்டத்தைக் கொஞ்சமுமறியாதவனும், வனத்தில் 'உஞ்சவிருத்தி' நியமங்கொண்டு எப்படி காலக்ஷேபஞ் செய்வானோ! லோகநாதனைப் விளங்கிக்கொண்டிருக்கிற என் கண்மணி ராமனை ஆச்ரயித்துக்கொண்டிருக்கிற நாம் எல்லாரும் மிருஷ்டான்னம்புஜிக்கிறது, என் குழந்தை ராமன்மட்டில் கந்தமூலாதிகளைப் புஜிக்கிறதா? என்ன அநியாயம்! குணஞ்ஞனும் ராஜாவுக்குப் பிரியமானவனுமான என் கண்மணி ராமச்சந்திரனை

வனத்திற்கு அனுப்ப நியாயம் என்னவோ தெரியவில்லையே அசமஞ்சனை சகரர் வனத்துக்கனுப்பியதுதான் நியாயம். குணமணி ராமனை வனம்போகவிடுத்தனர் ராஜாவென்றால், இந்த நகரவாசிகள் நம்புவார்களா? இப்படிச் செய்தால், இனி பிள்ளைகட்கு பிதாவினிடம் பக்தி உண்டாகுமா? உண்டாகாது! உண்டாகாது! புவனசுந்தரனை நீ வனம்போகும்படிநேரிட்டதே தைவபலந்தான் என்றெண்ணுகிறேன். நீ வனம்போவது எனக்கு துக்கம்தான். நீ வனம் செல்வதால் நின்பிரிவாற்றாமல், நின்னைக்காணாமல் மனம் வருந்தித் தவிப்பதாலுண்டாகுஞ் சோகமே அக்நி, நின்னைக்காண்பதற்கில்லாததே காற்று (வாயு) நின்பிரிவையாற்றமாட்டாத என்பிரலாபமே சமித்து, என் சிந்தையே புகை; நின்னைப்பாராததினால் என் மனதானது கொதித்து அதாவது வயிறு பற்றி எரிவதற்கு, துக்கத்தினாலுண்டாகும் பெருமூச்சு விசிறி; கோடைகாலத்தில் புதரில் பிடிக்குந்தீ யெப்படி எரியுமோ; அந்த அக்நியைத் தணிக்கும்படியான தண்ணீர் பக்கமில்லாமற் போவதுபோல், தண்ணீருக்குச் சமானமான, ஹே ராம! நீ என் சமீபத்திலில்லாமல் வனம் போவதினால் என்னை மேற்கூறிய எரி (அக்நி) தகித்துவிடுமே, என் செய்குவேன்! இவ்வாறு என்னுடைய துன்பம் சகிக்கமுடியாமலிருக்க, என்னை உன்னுடன் வனத்திற்கு வரவேண்டாமென்று சொல்வது நியாயமாமோ! ஈன்ற கன்றைப் பிரிந்து தாய்ப்பசுவானது கன்றைப் போனவிடந்தேடிப் போகாமலிருப்பதுமுண்டோ? அப்பா, குழந்தாய்! நீ எங்கு சென்றாலும் சரி, என்னையுமழைத்துப் போகும்படி வேண்டிக்கொள்கின்றேன்'' என்று கதறியழுதனர்.

அப்பொழுது ராமச்சந்திரன் "அம்மா! நமது மகாராஜா கைகேயியினால் வஞ்சிக்கப்பட்டனர். நானும் இங்கில்லாமல் அரண்யம் போய்விட்டால் கைகேயியினால் என்னுடைய பிதாவுக்கு எவ்வித சிசுருஷையும் நடக்கமாட்டாது. இந்த சமயம் அவருக்கு சிசுருஷை பண்ணுவது யார்? அவரைத்தனியேவிடுத்து என்னுடன் கானேக்க வர நினைத்தலே அடாதகாரியம். பர்த்தாவைப் பிரிந்து போவதைப் பற்றி மனதினால் நினைத்தலும் கூடாதே! அப்படிநினைத்தாலே மகா தோஷமுண்டாகும். பூமண்டலாதிபதியான என் பிதா ஜீவந்தராயிருக்குங்கால், நீ அவரைவிட்டு இங்குமங்கு மெங்கும் விலகாமல் அவருடன் கூடவேயிருந்து அவருக்கு அன்புவெள்ளம்பெருகுமாறு அவருடைய மனத்திற்குகந்த பணிவிடைகளை யியற்றிவரவேண்டுவதன்றோ ஸ்திரீகளின் லக்ஷணம். பர்த்ரு சிசுருஷைதான் ஸ்திரீக்ட்கு சாஸ்வதமான பேரின்பத்தைப் பெறும்படியான தர்மம். ஆகையால் என்னுடன்கூட வனம்நோக்கி விரும்படியான நின் எண்ணத்தை இந்த நொடியிற்றானே விட்டுவிட வேண்டும்'' என, கௌஸல்யா தேவியாரும் "அப்படியே ஆகட்டும்'' என்று அங்கீகாரஞ் செய்தனர். மீண்டும் ராமர் கௌஸல்யையநோக்கி, அம்ம! நீரும் நானும்

மகாராஜாவின் கட்டளையைக்கேட்கக் கடமைப்பட்டவர்கள். உமக்கு அவர் பர்த்தாவும், எனக்குப் பிதாவும், குருவும், தெய்வமும் போன்றவர்; உலகத்திற்கோ ஈசுவரராய் விளங்கிக்கொண்டிருப்பவர். என் அம்மா! நான் அவருடைய கட்டளையால் வனஞ்செல்ல வேண்டியிருந்ததால், நவ-பஞ்ச (9-5) வருஷங்கள் வனவாஸ யோக்யமா யேற்படுத்தலான காலக்கிரமத்தை, வேட்டங்கருதியே கானேக்கி நின் ஏகபுத்திரனும் நான் சென்றிருப்பதாய் விளையாட்டாகவே மேற்குறித்த காலத்தைக் கழித்துவிட்டு, நான் மீண்டுந் திரும்பிவருங்கால் நின் மொழிப்படி நடக்கின்றேன். தைரியமாயும் சுகமாயுமிருக்கும்படி அடிபணிந்து கேட்டுக்கொள்ளுகின்றேன்'' என்றனர்.

ராமச்சந்திர பரமாத்மாவினுடைய அன்புள்ள வார்த்தைகளைக் கேட்ட தேவியார், புத்திரனுடைய மன உறுதியைக்கண்டு, அவனிடமுள்ள 'வாத்ஸல்யத்தினால் மனஞ்சகிக்கமாட்டாமல் கதறி அழுதுக்கொண்டு அடா, என் கண்மணி, ராமச்சந்திர! ராமபத்ர! சோகக்கடலில் மூழ்கியிருக்கிற என்னைக் கரைசேர்க்க மனம் ஏன் வரவில்லையோ நினக்கு; அநாதையாய்த் தவித்தழும்படியான நின் மாதாவான என் தீனபாவமறிந்துகொண்ட பின்னும் என்னை உபேக்ஷை செய்வதழகாமோ, நன்மணி! இனி கைகேயி என்ன உபத்திரவம் பண்ணுவாளோ? கைகேயியினாலடைய விருக்கும் துன்பமாகிற அலையுடன் கூடியதாயிருக்கின்றதீத என்னுடைய சோகமாகிற கடல். நின் பிதாவின் கட்டளையை நிறைவேற்றும்படியாக, நீ கானேக்கிச் சென்றால், தயவுசெய்து என்னையுமழைத்துச் செல்வாயாக; நானும் கானில்வதியும் மான்களுடன்கூட ஒரு மான்போல் வசிக்கின்றேனே'' என்று கண்ணீர்விட்டுக் கதறியழுதனள்.

பெற்றதாயின் அன்புப்பெருக்கினால் கதறியழுதுகொண்டு வேண்டிக்கொள்ளும் தைன்யமொழிகளைக் கேட்ட ராமருக்கும் தன்னையறியாமல் துக்கம் பொங்கியழுது, பிறகு கொஞ்சம் கொஞ்சமாய் அதிகப் பிரயாஸையால் தன் துக்கத்தைத் தணித்துக்கொண்டு தாயாரை மறுபடியும் பார்த்து என் அம்மா! உலகத்தில் ஸ்திரீகட்கு பர்த்தாதான் தைவமும் பிரபுவும்; அவனுக்கு பத்நி அடங்கி நடக்க வேண்டியவள்; ஆகையால், என் அம்மா! நீர் பர்த்தாவான மகாராஜாவின் உத்தரவன்னியில் என்னுடன்கூட வனம்வரலாமா? லோகநாதனான பிதாவின்கட்டளையை நான்கேட்கவேண்டியவனே. உமக்கு நாதனான மகாராஜா உம்மை யொருகாலும் அனுதரவு செய்யவே மாட்டார். மேலும், என் தம்பி பரதனும், நல்ல குணஞ்ஞன். அவனும் உம்மை அனுதரவு செய்யவே மாட்டான். நான் வனம் போனதும் அவர் (பிதா) புத்திரசோகத்தினாலே வருந்துவார். அவரைக் கஷ்டப்படும்படி விடாமல் சமீபத்திலிருந்து ஹிதம்பண்ண வேண்டி

யவர் நீரேயாகிறீர். நீர் மிகவருந்தும் அவரிடம் சிறிதும் அலக்ஷியமா யிருக்கலாகாது. அபர வயதுகாலத்தில் அவருக்கு இத்தகைய துக்கம் சம்பவித்திருக்கின்றது, இந்த துக்கம் அவரை நாசஞ்செய்யாதிருக்கும்படி நீர் தான் காப்பாற்றவேண்டும். எந்த ஸ்திரீ உலகத்தில் கொழுநன் அனுமதியின்றி விரதமிருந்து நோன்பு விரதங்களைச் செய்தாலும், அவன் நற்கதியில்லாமல் பாபகதியைத்தான் அடைய நேரிடும். பிராஹ்மணனுக்கு நித்ய சந்தியாவந்தனானுஷ்டானஞ் செய்யாமல் மற்ற தர்மங்களை யனுஷ்டித்தலால் பயன் சிறிதுமில்லாததுபோல், ஸ்திரீகட்கு பர்த்ரு சிச்ரூஷையைக் காட்டிலும், வேறு தர்மங்களினால் பயன் எள்ளளவும் கிடையவே கிடையாது. பிராமணனுக்கு காயத்திரி மாத்திரம் போதுமான ஜபம் என்று மனு கூறியிருக்கின்றனர். காயத்ரீ ஜபத்தினாலேயே அந்த பிராஹ்மணன் நல்ல லோகத்தை யடைகின்றான். அதேமாதிரி ஸ்திரீஜாதியானவள் பர்த்ரு சிச்ரூஷை ஒன்றினாலேயே உத்தமமான சுவர்க்கபதவியைப் பெறுகின்றனள். உலகத்தில் ஸ்திரீ, பர்த்தாவைக்காட்டிலும் இதரதேவோபாஸனையே செய்ய வேண்டியதில்லை. இத்தகைய விதிகளினால் பெண்ணாய்ப் பிறந்தவர்கள் பர்த்தாவுக்கிதமாகவும், ஒற்றுமையாகவும் இருந்து, அவனுக்குகந்த பணிவிடைகளைச் செவ்வனே யியற்றிவரவேண்டும். சமயோசிதத்தை யெண்ணி நான் மேற்கூறிய தர்மத்தைச் சொல்லும் படியாக வரவில்லை. சநாதனமா யேற்பட்ட தர்மானுஷ்டானத்தை ஞாபகமூட்டலானேன். அம்மா இந்தப்படியே, வேதங்களும், ஸ்மிருதிகளும் ஸ்திரீதர்மானுஷ்டானத்தை முறையிடுகின்றன. வழக்கம் போல் அக்நிகாரியங்களை சாயம் ப்ராத: நடந்துவரும்படி பார்த்து வர வேண்டும். நீர் ஜ்யேஷ்ட பத்நியாகையால், அக்நிஹோத்திராதி காரியங்களில் சிரத்தைவைக்கவேண்டும் என் க்ஷேமத்தைக்கருதியும் தேவதைகளை திருப்தி பண்ணும்பொருட்டும் பற்பலவிதமான அக்னி காரியங்களை வழுவுதலின்றி செய்யவேண்டும். பிராஹ்மணர்களை பூஸுரர்களென்று கூறப்படும். அவர்களைப் பூஜிக்கவேண்டும். அம்மா! நான் வனவாஸகாலமுடிந்து திரும்பிவரும் காலத்தை எதிர் நோக்கி என்னுடைய க்ஷேமத்தின்பொருட்டு என்னுடைய பிரிவாற்றாமையால் விரக்தையா யிராமல், பரமநியமத்துடன், சாத்விக போஜனமபண்ணிக்கொண்டும், பர்த்ரு சிச்ரூஷைகளில் சிரத்தை வைத்துக் கொண்டு மிருந்து வரவேண்டும். என் அம்மா! நானும் பதினான்கு வருஷகாலமுடிந்து, க்ஷேமமாய் ஊர்வந்து சேர்ந்து, மகாராஜனும் ஜீவந்தராயிருந்தால்; தங்கள் அபீஷ்டங்களை யெல்லாம் அடையலாம் என்றனர். அப்பொழுது கௌஸல்யை, அப்பா, குழந்தை! நீ ஒரே பிடிவாதமாயிருக்கின்றனை. நீ சூரனாதலால் என் வார்த்தைகள் நின் செவிக்கேறவில்லை. நின்னைப்பிரிந்திருக்கவும் எனக்கிஷ்டமில்லை. நின் மனதை எவ்விதத்திலும் திருப்பக்கூடவில்லை. என் வார்த்தைகளையும் நீ தவறி நடந்தவனில்லை. ஆகையால் இப்பொழுது இவ்விதமாய்

நின்னைவிட்டு நான் பிரிந்திருக்கும்படியாய் சம்பவித்திருப்பது கால வித்யாசமென்றெண்ணுகின்றேன். என்னைவிட்டு நீ பிரிந்துபோகும் படியான காலம் சம்பவித்துவிட்டது மங்களகரமாய்ப் போய்வா! நீ என்ன ஊறுதி மொழிகள் சொன்னாலும் நான் உன்னைவிட்டுப் பிரிந்திருப்பது எனக்கு மிகுந்த சிரமமும் துன்பமுந்தான் ; நீ க்ஷேமமாய்த் திரும்பி வந்த பிறகுதான் இந்த எனது கொடிய துன்பம் நீங்கும். தர்ம நிரதனும் நீயே பாக்கியசாலி. நீயே கிருகிருத்யனும் நன்மணி பிதுரு ரணம் தீர்ந்து திரும்ப நீ பட்டணம் வந்தபிறகே, நான் சுகமடைகின்றேன். என்றுமில்லாமல் இன்று என் வார்த்தையைமீறி நடப்பதானது தைவபலமேதான் அப்பா என் குணமணியாம் ராமா! நீ க்ஷேமமாய்ப்போய்வா அப்பா! ஜடாவல்கலதாரியாய் நீ திரும்பி அயோத்திவரும் நற்காலம் இப்பொழுதே வந்து விடலாகாதோ! என்று பின்னும் ராமச்சந்த்ரனைப்பார்த்து, அப்பா ராம! விருத்ரர்சூரனை வதஞ்செய்யுங்கால் தேவராஜாவுக்கு உண்டான மங்களங்களும், ஸ்வர்க்கத்திலுள்ள அமிர்தத்தைக் கொண்டுவரும்படியாய்ச் சென்ற கருடனுக்கு விந்தையால் ஏற்பட்ட மங்களங்களும் அமிருத விபாககாலத்தில் தேவாஸுரயுத்தத்தில் தைத்ய (அஸுர)ர்களை முடிக்கும்படியாய்ச்சென்ற தேவேந்திரனுக்குண்டான மங்களங்களும், பகவான் வாமன (குள்ள) மூர்த்தியாய் பலியினிடஞ் சென்று யாசித்து பிறகு திரிவிக்ரமாவதாரமெடுத்து அந்த பலியையே பலியாகவைத்து அதாவது ப்ாதாளத்திலழுத்தி யருளிய போது உலகத்திற்கேற்பட்ட மங்களங்களும், உனக்குண்டாகவேண்டும்; அல்லாமலும், ருதுக்கள் சாகரங்கள், த்வீபங்கள், வேதங்கள், உலகங்கள் எல்லாம் உனக்கு மங்களத்தையே செய்யக்கடவது. ஜன்ம சார்த்தகமாம் (அவதார ப்ரயோசனமாம்—பித்ரு வாக்ய பரிபாலனமாம்) காரியத்தை முடித்துக்கொள்ள வல்லமை பொருந்திய "சித்தார்த்தை" என்ற மூலிகையையும், மனதிலுள்ளசல்யங்களைத் தினையும் நிவர்த்திக்கும்படியான "விசல்யகரிணி" என்ற மூலிகையையும் கொணர்ந்து ராமபத்ரன் கையினில் கௌஸல்யாதேவியார் இரக்ஷாபந்தனமாகக் கட்டினர். இரக்ஷை கட்டியானதும் மனப்பூர்த்தியான மங்களாசீர்வாதங்களைச் செய்துக்கொண்டே ராமரைப் * பிரதக்ஷிணம்பண்ணி ஆலிங்கனம்பண்ணிக்கொண்டு, அப்பா ரகு ராமா! வனஞ்சென்று சித்தார்த்தனாக சீக்கிரம் திரும்பி வரக்கடவாயாக என்று வாழ்த்தியனுப்பலாயினள்.

இனகுலோத்பவனும், ரகுகுல ஸோமனுமான ராமமூர்த்தியானவர் தம கைங்கர்ய பக்தியிற் சிறந்த லக்ஷ்மண ஸ்வாமியுடன் அன்னை ஜானகியின் அந்தப்புரம் நோக்கிச் சென்றனர். சுபம்!

துறையூர் மா. சுப்பராமய்யர்.

---

* ரக்ஷாபந்தனம் பண்ணி மங்களத்தைக்கோரி பிரதக்ஷணம் பண்ணுவது உலக வழக்கமாம்.

## பூதவதி அல்லது புனிதவதி
என்னும்
## காரைக்காலம்மையார் புராணம்.

(412-ம் பக்கத் தொடர்ச்சி.)

25 அம்மருங்கு நின்றயர்வா ரருங்கனிக்கங் கென்செய்வார்
மெய்ம்மறந்து நினைந்துற்ற விடத்துதவும் விடையவர்தாள்
தம்மனங்கொண் டுணர்தலுமே யவாருளாற் றாழ்குழலார்
கைம்மருங்கு வந்திருந்த ததிமதுரக் கனியொன்று.

(இ-ள்.) கணவனாரான பரமதத்த செட்டியார் கனியின் உருசிக்கு மகிழ்ந்து இனையதொருபழமுளது. அதனையும் இடுக் என்றலும், கொண்டுவர அணைவார்போல் அங்ககன்றவர் சமையற் கட்டினுட்புகுந்து அவண் நின்று அருமையான மாங்கனிக்கு யோசித்தார் வருந்தினர். என்செய்தும் என்ன? வருமா? அடியார் உண்டு சென்றார். இனி யென்செய்வது? ஒன்றுந்தோன்றாதவராய் மிகுந்த துன்பத்தை யெய்தினர்? இல்லை. தம்மைத்தாம் மறந்து நினைந்து உற்றவிடத்து உதவும் கருணைவள்ளலாரும் இடபவாகனரூடருமான பரமசிவத்தினது பாதாரவிந்தங்களை மனதில் தியானித்து நின்றார். அச்சமயப் பரமனது அருளால் தாழ்ந்து நீண்டகுழலினையுடையவ ராகிய புனிதவதியாரது கரத்தில் அதிக மதுரமுடைய கனியொன்று வந்திருந்தது. கடவுள் கருணை வவளவென்றம், அவரைதுதிப்பவர்க்குப் பிரதியாக மோக்ஷம் (அபீஷ்டம்) என்னும் விடையானவரென்பதும் தோன்றவே "விடையவர்" என்றார் ஆசிரியர் சேக்கிழாரும். நிற்கக் கடவுள் தம் அன்பர்கள் கருதியவளவில் அவர்கட்கு விரைந்துவந்து உதவக்கூடியவர் என்பதை

"........................................
கதுமெனக்கருதுமன்பர் உளத்தினில் புகுந்துபாயும்
முதுமறைப் பெருமான்.........—125 என்றும்

"நகைதிறந் திலங்கப் பொங்கி நன்றுநன் றென்ன நக்கு.
விசைபிறந் துருமு வீழ்ந்த தென்னவோர் தூணின் வென்றி
யிசைதிறந் தமர்ந்த கையா லெற்றின னெற்ற லோடும்
திசைதிறந் தண்டங்கிறிச் சிரித்தது செங்கட் சீயம்" 126 என்றும்.

"பொடிய ணிந்தெழில் பொங்குறு மல்லம
ணடியார் தங்க ளகத்திற் றுயரினை
யுடையி ழுந்த வொருவன் கரமெனக்
கடித டைந்து களைந்தருள் செய்யுநாள் 127 என்றும்.

---

125 குசேலோபாக்கியானம். 126 கம்பராமாயணம்.
127 பிரபுலிங்கலீலை

"பங்கயத் திருவைப் பாரான் பணிமுடி நிழலைத் தேடான்
சங்கு சக்கரமு மேந்தான் தன்னெதிர் தொழுது நிற்கு
மிங்கிதக் கருடன் மீதி லேறிடா னிபத்தைக் காக்க
கங்கையைப் பெற்ற பாத சாரியாய்க் கடுகி வந்தான்" 128

என்றும் காணப்படுகின்றமையினால் அம்மையார் அயர்வுற்று மெய் மறந்து ஈசனைத்தியானித்து நின்றதையறிந்த கருணைவள்ளலாரான கருணாகரன் அம்மையாரை யாட்கொண்டருளும் நோக்கத்தின் அறிகுறியாக யவர்வேண்டி நின்றதையவர் கையினிடமாகத்தந்தருளினார்.

26 மற்றதனைக் கொடுவந்து மகிழ்ந்திடலு மயின்றதனி
லுற்றசுவை யமுதினுமேற் படவுளதா யிடவிதுதான்
முற்றருமாங் கனியன்று மூவுலகிற் பெறற்கரிதாற்
பெற்றதுவே றெங்கென்று பெய்வளையார் தமைக்கேட்டான்.

(இ-ள்.) ஈசரனு ளளிக்கப்பெற்றதான மாங்கனியினை கொண்டு வந்து மனாளனுடைய இலையிலிடலும், பரமதத்த செட்டியார் அக்கனியையுண்டு அதன் மாட்டுள்ளசுவை யமுதத்தினுமதிகப்பட்டிருப்பதற்குவியந்து அம்மையாரை நோக்கி, பெண்ணே! இது முன்னே என்னால் கொடுத்தனுப்பப்பட்டு இதற்கு முன் என்பரிகலத்திலிட்ட கனியோடு கூடினதன்று. இது மூன்று லோகத்திலும் பெறுவதற்கு அருமையானது, முன்னுண்ட கனியைகாட்டிலும் மிக்க சுவையுடையதாயிருக்கின்றது. இதனை நீ யெவ்விடமிருந்து பெற்றனை? என்று கேட்டான்.

27. அவ்வுரைகேட் டலுமடவா ரருளுடையா ரளித்தருளுஞ்
செவ்வியபே ரருள்விளம்புந் திறமன்றென் றுரைசெயவார்
கைவருகற் புடைநெறியாற கணவனுரை காவாமை
மெய்வழியன் றெனவிளம்பல் விடமாட்டார் விதிர்ப்புறுவார்.

(இ-ள்) செட்டியார் கேட்ட கேள்விக்கு நால்வகைக் குணத்திலொருவகைக் குணமுடையவரான அம்மையார் அருளினையளிக்கும் அன்புடையவரான ஈசன் அளித்தருளுஞ் செவ்வித்தான பேரருளை செப்புவது சரியன்றென்று செப்பாதிருந்தார். இஃதென்னையெனின் 'மடவா ரருளுடையா ரளித்தருளுஞ் செவ்வியபே ரருள்விளம்புந் திறமன்றென் றுரைசெய்யார்' எனறது 'பேதமை யென்பது மாதர்க் கணிகலம்' என்னும் ஔவைப்பிராட்டியின் முதுமொழியை யநுசரித்தேயாம். என்னை? பெண்ணிலக்கணங்களில் ஒன்றாகிய மடம் என்பது அவர்க்கு ஆபரணமாய் விளங்குகின்றமையான் மடம் என்பது அறிவின்மையெனப் பொருள்படினும் இது நியாயத்தாலும் அநுபவத்தாலும் பெண்களுக் காபரணமாகாமை யுணரப்படுதலின் அறிந்தும் அறியாது போலிருத்தலும் தம்பெருமிதத்தை வெளிக்

128 கஜேந்திரமோக்ஷம்.

குத்தோன்றுது மறைத்திருத்தலுமே இவண் பெண்களுக்கு அணிகலமாகக் கொள்ளப்பட்ட பேதமைக்குப் பொருளாம். ஆதலினால், அம்மையாரும் பரமசிவனார் தம் திருவருளை தாம் பெற்ற பெருமிதத்தைச் சொல்லுதல் திறம் அன்று எனமதித்து உரைசெய்யாராயினர். இப்பொருள்படவே இங்கு அம்மையாரை மடவார் என்று ஆசிரியர் குறிப்பித்தார் போலும். பின் யாது சொல்வது என்பதை ஆலோசிக்குமிடத்துக் கணவரிடத்துப் பொய்மொழி கூறல் கற்புடைய மகளிருக்குப் பெருக்குற்றமாவதையுணர்த்து யாதுசெய்வது என அஞ்சினார் என்பர் "கைவருகற் புடைநெறியாற் கணவனுரை காவாமை மெய்வழி யன்றென விளம்பல் விடமாட்டார் விதிர்ப்புறுவார்" என்றார் ஆசிரியர். (தொடரும்.)

வீ. ஆர். கேய்க்வர்.

## ஸ்ரீ பழனியாண்டவர் திருவருட்பாசுர அந்தாதி

[359-ம் பக்கத் தொடர்ச்சி]

32 அரிமரு காவெனு மன்பர்க் கரன்பதமா மமிர்தைச்
சரிவரக் காட்டுந் தனிப்பர நாதன் றருமதலாய்
எரிநர கெய்தா தினிய சுகமா யிருந்தபடி
பிரிவறச் சேர்ப்பாய் பிணியா முடற்சுமைப் பேயறவே

33 பேயற வோட்டும் பெருமாண் மருகா பிணிதவிர்த்துத்
தாயற நோக்குந் தனையரைப் போற்றிடு தந்தையெனக்
காயற வீட்டுங் கவியெனக் கொள்வாய் கடிதடமாம்
நோயற மென்மேல் நொடித்தெனை யாள்வார் நுமர்களித்தே

34 நுமர்களிப் பாமென நுண்ணறி வில்லா நுடங்கிடையார்
தமர்களெனத் தொழுந்தன் மையிற்சார்ந்துபின் றுமதமாய்
சமர்களவர் பலதாக்கித் தொடரவும் சம்மதமாய்
எமர்களெனப் புகழ்ந்தெண் ணிலசெய்திட வேற்பலவே

35 ஏற்பன வீதல வீசன் றிருவடி யென்றறிந்துந்
தோற்பன செய்து தொலையாப் பவத்தைச் சுமவெனவே
நோற்பன யாவுள நூலுள வாமென நோற்றிடினும்
ஆற்பன வன்சொ லருப்பொரு டேரார் அறிவிலரே

36 அறிவிலர் சொல்லு மரும்பொரு டேரிய லுப்பதல்லாற்
பொறிவழி போக்காப் புலமுனர் புண்ணியர் பொற்பெனவே
அறிவுடன் சொற்றதை யன்று டகங்கொளா வன்பிலர்தாம்
நெறிமுறை சேரார் நிமல சுகமது நேர்ந்திடுமே

37 நேர்ந்திடு மென்று நினைப்ப தல்லாற்பினர் நேர்ந்தொருவர்
கூர்ந்திட வான்பொருள் கூடாக் கொடுநெறி கூடிடுமோ
சார்ந்திடை மாழ்கித் தபித்தத னைத்தாஞ் சழக்கெனவே
வோர்ந்திட மாட்டார் உறுதி யுறவ துனதருளே

38. உனதருள் காணு வுலக ருறுதியென் றுன்னுவது
மனமது போன வழியல தன்றி மதியலவே
இனமது சேர்ந்தே யிறுதி வழிக்கா மினியசுகக்
கனமது கொள்வார் கலாப மயில்வா கனன்கழலே

39 கழலே தொழுவார் கருதுங் கருத்தைக் கனவிலுமே
அழலார் மெழுகாய் அகத்தை யுருக்கி யடைந்திலரே
விழலே யிறைத்து விளைசுகங் காணு விடரெனவே
அழலே சதமோ வரனா புதல்வா வறுமுகனே.

40. அறுமுக னாக வவதரித் தானை யறிந்திலிரோ
குறுமுனி காணக் குருவடி வாகிக் குறித்தாற்கும்
மறுமுக நோக்கா மலர்மக னாதிய வானவர்க்கும
பெறுமுக மீதெனப் பேசிடும் பெட்பார் பெருந்தகையே

41 பெருந்தகை யென்றே பெரிதுவந் தேற்கும் பிதாமகற்கு
வருந்தொகை யாவும் வகுக்கும் விதமே வரமளித்தான்
தருந்தகை யானெனத் தண்ணருள் சார்ந்த தமியர்க்கும்
அருந்துணை யாவா னவனியிற் போந்தா னழகுறவே

42 அழகுறப் பாட வடியருள் சத்குரு வாண்டவனைப்
பழகுத லீதெனப் பாவித் தளித்த படிநிதமும்
தொழுகுத லன்றித் துயர்செயு மாயை தொடருலகில்
நழுவுத லாமோ நயனமீ ராறுள நாயகமே

43 நாயகத் தன்மை நதிமதி சூடிடும் நாயகனே
தாயக மாகத் தனித்திட வோதிய சத்தியத்தை
வேயகம் போந்த விமலருக் கோதி விதிபிசகா
நேயகம் காட்டிய நீப மலர்த்தொடை நேர்பரனே

44 நேர்பர னீயலா னோர்ந்தொரு தேவரை நித்தநித்தஞ்
சீர்பர னென்றே சிறப்பித் தவர்கள் செனனமெனும
ஆர்பர வைக்கே யமிழ்வ தல்லாற்பி னரிபிரமர்
சீர்பர விதநேர்ச் சியிற்செப் பியபொரு டோர்ந்திலரே

(தொடரும்.)

காலஞ்சென்ற A. சிவசூரியம் பிள்ளை,
தமிழ்ப்பண்டிதர், ஆனைமலை.

ஸ்ரீ கிருஷ்ணாய பரப்ரம்ஹணே நம:

# பகவத் கீதாசாரம்.

முன்னுரை:—பாரத யுத்தம் தொடங்குங் காலத்தில் குருக்ஷேத்திரத்தில் யுத்தகளத்தில் நடக்கும் சகல சங்கதிகளும் சஞ்சயனுக்கு நேராய் தெரியும்படியாகவும், தெரிந்த சகலத்தையும் திருதராஷ்டிரனுக்குச்சொல்லும்படி யாகவும் வியாஸபகவான் சஞ்சயனுக்கு ஞானக்கண் காதுகளைக் கொடுத்திருக்கிறதாகிய அனுக்கிரகத்தினால், பகவானால் அர்ச்சுனனுக்கு உபதேசிக்கப்பட்டு, சஞ்சயனால் கேட்கப்பட்டு திருதராஷ்டிரனுக்குச் சொல்லப்பட்ட பகவத்கீதையின் சாரத்தை சிற்றறிவிற்கெட்டியவரை சொல்லப்புகுவோம். தெய்வத்தன்மை பொருந்திய வெள்ளைக் குதிரைகள் பூட்டிய குரக்குக்கொடியோனாகிய அர்ச்சுனனுடைய ரதத்தை ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா சாரத்யம் செய்துகொண்டும், சங்கங்களை வாயில்வைத்து ஊதிக்கொண்டும் யுத்தகளத்தில் கொண்டுவந்து நிறுத்தினார். உடனே அர்ச்சுனன் தன் கண்ணுக்கெட்டிய தூரத்திற்கும் அடங்காமல் நிற்கும் இருதிறத்து சைனியங்களையும் கவனித்து, ஸ்ரீ கிருஷ்ணனைப் பார்த்து, ஹே கிருஷ்ணா! தகப்பன் முறையிலுள்ளவரும், பாட்டன் முறையிலுள்ளவரும், குரு முறையிலுள்ளவரும், சகோதரர் முறையிலுள்ளவரும், பந்துக்கள் முறையிலுள்ளோரும், சிநேகர் முறையிலுள்ளோரும் அடங்கிய இச்சைசியங்களைப் பார்த்து எனது அவயவயங்கள் சோர்வடைகின்றன. நாவுலர்கிறது கையிலிருக்கும் காண்டீவம் தானே நழுவுகிறது. உடல் நடுங்குகிறது. மயிர்க் கூச்சலுண்டாகின்றது. ரதத்திலேயே இருக்க சக்தியற்றவனாயிருக்கிறேன். ஏனெனில், இப்பந்துக்களையும் மற்றோரையும் கொன்று யாதொரு பலனும் காணப்போவதில்லை இவர்களை எல்லாங்கொன்று ராஜ்யமாளுவதில் என்னபலன், என்னசுகம்; இந்த அற்ப ராஜ்யத்தின் பொருட்டா இவர்களை யெல்லாங் கொல்லுகிறது. ஆததாயிகளான கௌரவர்களைக்கொல்லும் விஷயத்தில் பாபம் இல்லை என்றாலும் இவர்களைக் கொன்றால் எங்களைப் பாபமே வந்தடையும்.

---

* வீட்டுக்கு நெருப்புவைத்தவன், அன்னத்தில் விஷங்கலந்தவன், ஆயுதத்தினால் கொல்லவந்தவன், பொருளை யபகரித்தவன், பூமியையபகரித்தவன், மனைவியையபகரித்தவன், இவ்வாறு பெயரும் ஆததாயிகளென்று சொல்லப்படுவார்கள். எதிர்பட்ட ஆததாயிகளை விசாரிக்காமலே கொல்லவேண்டியது யாதொரு தோஷமுமில்லை மேல்கண்ட ஆறுவிதசெய்கைகளும் துரியோதனாதியர்கள் பாண்டவர்களுக்கு செய்தார்கள்.

ஆகையினால் விவேகமற்றுப் போயிருக்கிற மனதையுடைய துரியோதனாதியர்கள் குலநாசத்தினா லுண்டாகும் பாபத்தையும் மித்ரத்ரோகத்தினாலுண்டாகும் பாதகத்தையும் தெரிந்து கொள்ளாமற் போனபோதிலும் குலநாசத்தினா லுண்டாகும் பாபத்தை யறிந்திருந்தும் நாங்கள் இக்கொடிய செய்கை செய்ய என்மனம் நாடவில்லை குலநாசமடைந்தால் அனாதியாயிருக்கிற குலாசாரங்கள் முழுதும் நாசமடையும் ஆசாரம் வியாபித்தால் குலஸ்திரீகள் பழிப்படைவார்கள். பெண்கள் பழிப்படைந்தால் ஜாதிக்கலப்புண்டாகும். ஜாதிச்சேர்க்கையானது குலநாசஞ்செய்தவர்களுக்கும் குலத்திற்கும் நரகஹேதுவாகும். குலத்தைக் கெடுத்தவர்களுடைய பிதுருக்கள் தங்களுக்காக அந்தக் குடும்பத்தாரால் செய்யப்படும் பிண்டத்தினாலேயும் உதகத்தினாலேயும் செய்யப்படும் சிரார்த்த தர்ப்பணாதி கிரியைகளினாலுண்டாகும் பிரயோஜனத்தையிழந்து நரகத்தில் தள்ளப்படுவார்கள். ஜாதிசேர்க்கை யுண்டாகும்படிச்செய்த குலத்தைக்கெடுத்தவர்களுடைய இந்தப் பாபங்களினாலே அநாதியாயிருக்கிற ஜாதியாசாரங்களும் குலாசாரங்களுமறிந்து போய்விடும் குலாசாரங்களை இழந்த மனிதர்களுக்கு நரகத்திலெப்பவும் வாசமானதுண்டாகுமென்று கேட்டிருக்கிறோம். ஆதலால் ஆயுததாரிகளான கௌரவர்கள் நிராயுதனான என்னை இந்தயுத்தகளத்தில் கொல்லுவார்களானால் அது எனக்கு மிகவும் க்ஷேமமாகும்; என்று கூறிவிட்டு தன்கையிலிருந்த பாணத்தோடுகூடிய வில்லை ரதத்தில் வைத்துவிட்டான்.

உடனே ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவானவர் கண்ணீர் சோரும் கண்ணுடைய அர்ஜுனனை நோக்கி, ஓ அர்ஜுனா! அஞ்ஞானிகளுக்குண்டாகக் கூடியதும் பரலோகத்திற்கு கெடுதியானதும் அபகீர்த்தியை யுண்டாக்கக்கூடியதுமான இந்த மனக் குழப்பமானது இந்த ஸமயத்தில் உண்டான காரணம் என்ன? இழிவான மன அதைரியத்தை விட்டெழுந்திரு; என்றதும் அர்ஜுனன், ஹே மதுசூதனா! பீஷ்மர் முதலானவர்களையும் மற்றோர்களையும் கொல்வதைவிட பிச்சை யெடுத்துண்பது மேலானது. எவர் பக்ஷம் ஜயம் உண்டாகுமோ அறிகிலேன். ஆகையால் ஹே தீனதயாளா! இவ்வுலகத்தில் நிகரற்றதும் செல்வத்தில் நிறைந்ததுமான இராஜ்யத்தையும், தேவேந்திர பதவியையு மடைந்தபோதிலும், இந்திரியங்களுக்கு வரக்ஷியை உண்டாக்குகிற வென்னுடைய விசனத்தை எது போக்கடிக்குமோ அதை எனக்கு உபதேசம்செய்யும் என்றனன். உடனே கண்ணன், ஹே காண்டீபா! நீ துக்கப்படத் தகாதவைகளைப்பற்றி துக்கப்படுகிறாய், விவேகியாயிருந்தும் அறிந்து கொள்ளவில்லை. இறந்தவர்களைக்குறித்தும் உயிருட னிருக்கின்றவர்களைக் குறித்தும் வித்வான்கள் துக்கிக்கமாட்டார்கள். ஏனென்றால் ஞானிகளுக்கு

சிநேகிதன் விரோதி என்பவர்களில்லை. ஓ புத்திமானே! துக்கத்தை விட்டுவிடு, துக்கமானது சகலத்தையும் நாசம்செய்யத்தக்கது. துக்கமானது தேகத்தை யெரித்துவிடும். துக்கத்தினால் புத்தியானது நாசத்தையடையும். துக்கத்தினாலடிப்பட்ட புருஷனை வெட்கம், தைரியம், தர்மம், ஐசுவரியம், புகழ்ச்சி, நினைப்பு, நன்னடக்கை மற்ற யெல்லா தர்மம், இவைகள் அவனிடத்தி லிருக்கமாட்டாது. நானும் நீயும் இந்தயுத்தகளத்திலுள்ள ராஜாக்களும் ஒரு காலத்திலாவது இல்லாமலிருக்கவில்லை. தேகமழிந்த பின்பும் நாமில்லாமலுமிருக்கிறதில்லை என்றால் எப்பவுமிருக்கிறோம், (தொடரும்)

ஸ்ரீநிவாஸன். 'ஸ்ரீகிருஷ்ணபக்தன்' உடையாளூர்.

## நீதிவிஜயம்

385-ம் பக்கம் தொடர்ச்சி.

" கற்பிளவோ டொப்பர் கயவர் கடுஞ்சினத்துப்
பொற்பிளவோ டொப்பாரும் போல்வரே—விற்பிடித்து
நீர்கிழிய எய்தவடுப் போலே மாறுமே
சீரொழுகு சான்றோர் சினம்''

" உத்தமே க்ஷணகோபஸ்யான் மத்யமே கடிகாத்வயம் ।
அதமேஸ்யா தஹோராத்ரம் பாபிஷ்டோ மரணாந்தகஹ ॥

(தாத்) கோபமானது உத்தமனிடத்தில் க்ஷணப்போதும், மத்திமனிடத்து இரண்டு நாழிகையும், அதமனிடத்து ஒரு இரவும் பகலும் பாபியினிடத்தில் மரண பரியந்தமுமிருக்கும்.

கோபம் பெரும்பாலும் கீழ்ப்பட்டவர்களுக்கே உண்டாகும். கோபத்தாலேயே கீழ்ப்பட்டவர்களாகிறார்கள்,

"தூஷகச்சக்ரியா ஞூன்யோ நிக்ருஷ்டோ தீர்க்க கோபநஹ ।
சத்வாரஹ்கர்ம சண்டாளோ ஜாதிசண்டாள உத்தமஹ ॥

(தாத்) பிறரைத்தூஷிப்பவன், நித்திய கர்மானுஷ்டானத்தை விட்டவன், அதிலோப முள்ளவன், தீர்க்க கோபமுள்ளவன், இந்நால்வரும் கர்மசண்டாளர், இவர்களைக்காட்டிலும் ஜாதிசண்டாளன் உத்தமன்.

ஆதலால் கோபம் உண்டாகுமுன்னமேயே அடக்கமுயலவேண்டும். இவ்வளவு இழிவாய் கருதப்படும் கோபம் என்னும் கொடும் பாவியின் சிநேகத்தை விட்டு சாந்தமென்னும் நண்பனை உறவாட ஆரம்பித்துவிட்டால் அவன் இம்மையில் நற்கீர்த்தியுடன் வாழ்ந்து மறுமையில் ஈசுரசாயுஜ்பம் அடைவானென்பது திண்ணம். ஏனெனில் தீச்செயல்கள் ஒழிந்துவிட்டால் மோக்ஷசாயுஜ்யத்திற்கு வழிக்காட்டியாகிய ஈசுரபக்திதானே ஏற்படும், அந்தபக்தியினால் மோக்ஷ

பதவியைஅடைவோம். ஆதலால் அவ்வளவு உன்னதமான சாந்தத்தைக் கைக்கொண்டு நற்கதியடைய முயற்சியடைவோமாக,

" சினமுளோன் மனைமைந்தர்க ளவன்வெளிச் செல்லுந்
தினமெலாந் திருவிழவு கொண்டாடுவர் செல்லா
தினையன் றங்குகா ளிழவுகொண் டாடுவ ரிறப்பின்
மனையிலோர் பெருமணவிழா வந்தென மகிழ்வார் "

" நாளுநாங் கொளுந்துயர்க் கெலாங்கா ரணநாடின்
மூளுஞ் சீற்றத்தின் விளைவதா முனிவக முடையோர்
தேளும் பாம்பும் வெஞ்சின விலங்கினங்களுநனிவாழ்ந்
தாளுங் கானில் வாழ்பவ ரெனத்தின மஞரடைவார் "

" வெகுளித் தீயே ! வெகுளித் தீயே !
அறக்கும் மனத்தையும் கறக்குங் காற்றே !
உற்ற குணக்கல னெற்றுஞ் சுறவமே !
உடற்பெரும் புற்றினின் றுடன்றெழு மரவே !
தெள்ளிய வறிவின ருள்ளத் தடத்தையும்
பொள்ளென வுழங்கும் புல்லிய கடாவே !
வீட்டுநூல் வலரையும் மாட்டிடும் பேயே !
தீயரைக் காணிற் சேயரா யொதுங்குக
என்ற முதுமொழி நன்றென வோர்ந்தனன்
நீயுந் தீயோய் தூயை யல்லையால்;
ஆதலின் விலகிப் போதுவல் யானும்
நன்னெறி யொரீஇப் புன்னெறிச்
செலுத்துந் தன்மைய சிறுபைத் தியமே!" (தொடரும்)

தண்டமிழ்த் தொண்டன், உடையாளூர்,

## திருஷ்டாந்த வாக்கியங்கள்

1 கல்வியானது தாழ்ந்தவனை யடைந்திருந்தாலும் அவனை மேலான ராஜசமூகத்திற் சேர்க்கும்—நதியானது இயல்பாக தாழ்ந்த விடத்தை படையத்தக்கதாயினும் எளிதிற் சேரக்கூடாத சமுத்திர ராஜனை சேர்ந்துவிடுகின்றது

2 ஒரு கொடியவன் கல்வியினால் அலங்கரிக்கப்பட்டவனாயினும் அவன் நீக்கப்பட வேண்டியவனேயாம்—சர்ப்பம் இரத்தினத்தை தரித்திருந்தாலும் அவை மிகவும் பயங்கரமுள்ள கொடிய பிராணியன்றோ ?

3 சொற்ப அறிவுள்ளவனுக்கு அளவுக்குமீறிய புத்திபோதித்தால் அவனுடைய சொற்ப அறிவும் ஒன்றுமில்லாமற் போம்—புதி

தாய்ப் பிறந்த குழந்தையை புயல்காற்று வீசுமிடத்திற் கொண்டு வைத்தால் சுவாசிக்கச் சக்தியில்லாமல் உடனே இறந்துபோம்.

4 மனோசக்தியின் பிரகாசம் அளவற்றன. ஆனால் உபயோகிக்கும் முறை தெரிந்து உபயோகிக்காவிட்டால் அவை பிரயோஜனமற்றதாய் விடும்—கண்ணாடியின் பிரகாசம் அதிகம் ஆனால் அதை உபயோகிக்காவிடில் அதன் பிரகாசத்தை அறிந்துகொள்ள முடியாது.

5 எதையும் செய்ய வல்லவர்கள் எத்தனையோ பெயர் இருக்கின்றனர் ஆனால் அவர்களிற் சிலருக்கு தூண்டுகோலாக ஒருவரிருந்தாலன்றி எதையும் செய்யவல்லார்கள்—மின்சாரத்திற்கு சக்தியோ அதிகம் ஆனால் அது ஒருவருடைய முயற்சியில்லாமல் இயங்குவதில்லையே

6 எளிதிற் பெறத்தக்க பல நன்மையான காரியம் தனக்கெதிராக விருந்தும் முயற்சியின்மையால் அவைகளைப் பெறாமல் விட்டு விடுகின்றனர் பலர்—பேடி கையில் வாளாயுதம் விளங்கிக் கொண்டிருந்தாலும் அதனால் ஒரு பிரயோஜனமில்லை யல்லவா?

7 நல்லவர்களுடைய நட்பு சினேகமற்ற காலத்திலும் அவர்களின் குணம் சிறிதும் மாறுபடுவதில்லை—தாமரையின் நாளங்கள் அற்றுப் போனாலும் அதன் நூல்கள் பற்றிப்பிடித்துக் கொள்ளுகின்றன.

8 துர்ச்சனர்கள் மிக இனிமையாய் பேசுவார்களானாலும் அப்படிப்பட்டவரை அரைக்ஷணமும் நம்பலாகாது—(ஏனெனில்) அவன் நுனிநாக்கிலே தேன் இருக்கிறது இருதயத்திலோ விஷம் இருக்கின்றது.

9 பகைவனிடத்திலிருந்து விருப்பமுள்ள ஒன்றை பெற்றுக்கொண்டாலும் தீங்கேயன்றி அதனால நற்பயன் உண்டாவது மிகவும் பிரயாசை—அமிர்தமேயாயினும் அதில் விஷங்கலந்திருந்தால் அவை அழிவிற்கே காரணமாகிவிடும்

10 தன்னை நாடிவந்தவன் சத்துருவாயிருப்பினும் அவனை அன்புடன் ஆதரித்து உபசரித்தலே உத்தமமான காரியமாகும்—விருக்ஷமானது தன்னை தறிக்கின்ற விரோதிக்கும் குளிர்ந்த நிழலைக்கொடுத்து உதவி செய்கின்றது.

11 பெரியோர்கள் தாழ்ந்த நிலைமை யடைந்த போதிலும் கீழ் மக்களின் தீச்செயலுக்கஞ்சி அவர்களை வணங்கமாட்டார்கள்—தாங்கமுடியாத பெருஞ்சுமை ஏற்றப்பட்ட காலத்தும் கற்றூணனது தளர்ந்து வளைவதில்லையே.

12 அறிவுடையோர் தங்கட்கு எவ்வித கஷ்டங்களேற்படினும் அற்பமான காரியங்களில் சிறிதும் தலையிடமாட்டார்கள்—சிங்கமா

னது மிகுந்த பசியோடிருந்தாலும் புல்லைத் தின்னுமல் யானை மாமிசத்தையே புசிக்க இச்சிக்கும்.

13 சிறியவையாயிருந்தாலும் பல வஸ்துக்கள் ஒருங்கு கூடுமாயின் பெருங் காரியத்தையும் முடிப்பதற்கு வல்லனவாகும்---சிறிய நூற்களேயாயினும் கயிராகத் திரித்தால் பெரிய மதயானையையும் பிணித்துக் கட்டிவிடலாம்.

14 ஒரு காரியம் செய்ய ஒருவனால் முடியுமாயினும் அவனிடம் அக் காரியம் பெறவேண்டியவழியில் முயன்றாலன்றி முடிவுபெறாது-விறகுக்கு எரியும் தன்மையுண்டாயினும் அதனைத் தண்ணீரில் நனைத்து எரித்தால் எரியாதன்றோ.

15 முயற்சியிற் பின்னடைபவர்க்கு எந்த அற்பகாரியமும் பிரயோஜனமற்றதாய் விடும்---கண்ணிழந்தவன் கையில் விளக்கிருந்து பிரகாசித்தாலும் அதனால் அவனுக்கு ஒரு பிரயோஜனமுமில்லை.

16 ஒருவன் அற்பமனிதனாகவிருந்தாலும் அவன் தன் குலத்தவர்களோடு கூடிவாழ்தலே மிகவும் சிறந்ததாகும்--உமியினின்றும் பிரிந்ததாயின், அரிசியானது ஒருகாலும் முளைக்கமாட்டாதல்லவா?

17 அசுத்தமுள்ள சிறியார் சுத்தமுள்ள பெரியாரைச் சேர்ந்தால் அவரும் பரிசுத்தராய் விடுவார்கள்--அசுத்தமுள்ள சிறு கால்வாய் நீரானது சுத்தமுள்ள நதியில் கலந்தால் அவையும் பரிசுத்தமாய் விடுகின்றது.

18 பெரியோர்களின் மனமானது கோபமடைந்தாலும் விகாரமடைய மாட்டாது--வைக்கற்புற்கொள்ளியினால் சமுத்திரநீர் சூடடைய மாட்டாது.

19 புத்திமான் திரவியமில்லாதவனாயினும் உயர்ந்த நிலைமையையடைகிறான்---சுபாவமாய் உற்பவித்த குணோதயங்களுக்கு இடமாகிய சிங்கத்தின் மேன்மையை, பொன்மாலை தரித்திருந்தாலும் நாயானது அடைவதில்லை.

20 அறிவுடையோர் எதைக்காணினும் அதிலுள்ள குணத்தையே நாடுவார்கள் அறிவிலிகளோ அதிலுள்ள குற்றத்தையே நாடுவார்கள்--அன்னமானது நீர்கலந்த பாலானாலும் நீரைப் பிரித்துவிட்டுப் பாலைமாத்திரம் புசிக்கும், காகமோ அப்படியல்ல நல்ல இனிய கனிகள் நிறைந்த விருக்ஷக்கூட்டத்தை யடைந்தாலும் அதிலுள்ள வேப்பங்கனியையே விரும்பிப் புசிக்குமாம்

K. R. கணபதி பிள்ளை, சுண்டக்காமுத்தூர்.

## ஓர் கருத்து

உலக சிரேஷ்டர்களான என் சகோதரர்களே என் பால்யமுதலிருவரை நான் கண்ணுற்ற அநேக பத்திரிகைகளில் பெண்மணிகளின் முன்னேற்றத்துக்குத் தேவையான பதிவிரதா ஒழுக்கங்களை கற்பித்து வருகிறதே தவிர, பதிவிரதன் சரிதை ஒன்று வெளிவந்து என் மனக்குழப்பத்தை யடக்கி சகோதரர்கள் முன்னேறுவ்தாக தோன்றவில்லை.

இதனால் பதி அசுத்தமாயும், விரதாள் சுத்தமாயும் இருந்தால் போதுமானதா என்று நினைப்பதற்கும், சிலர் கேள்விகளுக்கும் இடம் தருகிறதென்பது என் கருத்து.
சகோதரர்களே !

(பெண்டிரண்டு கொண்டால் பெருநெருப்புச் சாகளவும்) என்பதற்கிணங்க நம் தமிழ்நாட்டு முன்னேற்றத்திற்கு பதிவிரதத்தோடு சதிவிரதமும் முன்னேறி வரவேண்டுமென்பது என் அபிப்பிராயம் இதனால் பதி தன் விரதத்தை சரிவர நடத்தினால் சதி தன் விரதம் குலைய முடியாது என்பது என் நோக்கம். ஆகவே இப்பூமண்டலத்தில் பதிவிரதம் எவ்வளவு குலைகிறதோ அவ்வளவு சதி விாதமும் குலைந்துபோகிறபடியால் இதில் ஆண்பெண் இருதிறத்தாரின் மனோபீஷ்டத்தினால் ஒரு நிமிஷ சுகத்தைக்கருதி, தன்னிடமாறிய தாமரைக் கொப்பாகுமென நினையாமல் தம், தம் கற்புகளை குலைத்து, மோட்சக்கடலைத் தேடியும் காணாதவர்களாய் போகும் என் சகோதரர்கள் அநேகர் உளர். ஆகவே உலகினில் சதி விரதம் என்பதை நீங்கள் கடைப்பிடித்து மோக்ஷக்கரையை நெருங்குவீர்களெனவும் இன்னும் இதைக் குறித்த விஷயங்களை வெளிப்படுத்தி என் கண்ணோக்கத்திற்கு வருமென்றும் நம்பியே என் மனமார்ந்த வந்தனத்துடன் இரஞ்சிதன் வாயிலாக வெளியிட்டதை உங்களிடம் வரப்பெறுவதாலும் நான் அடுத்த திங்களிலிருந்து என் சிற்றறிவிற் கெட்டிய சரிதை ஒன்றை வெளிப்படுத்த உத்தேசித்திருப்பதால் நம் மனோபீஷ்டத்தைப் பலருக்கும் தூதுசெல்லும் இரஞ்சிதனின் சிரமத்திற்கு பரிசளிப்பதைப்போல் சந்தாதொகை உயர்வுபடுத்த உத்தேசித்த இரஞ்சிதனின் நண்பரின் எண்ணத்திற்கு முன்னமே . எனக்குமுன் சின்னாளாக உள்ள சகோதரர்களை நாளது தைமீ 30-ந்தேதிக்குள் கிடைக்கும்படி இரண்டணா லேபிலை இரஞ்சிதனுக்கு அனுப்பி அடுத்த மாசி மீ சஞ்சிகையின் முகப்பில் நம் சகோதரவாஞ்சனையை ஒருவருக்குக் கீழ் ஒருவராக நமது பெயர்களை ரஞ்சிதனால் விவரிக்கப் போவதைக் காண சந்தோஷிக்கக்கூடுமென்றே என் மனமார்ந்த வந்தனத்துடன் தெரிவிக்கின்றேன். சுபம். சுபம். இங்ஙனம்

சந்தா நெ. 371 அன்புநிறைந்த A. M. துரைசாமி முதலியார்,

# தருமம்

தருமம் என்ற பதத்திற்கு அறம், கொடை, தானம், என்னும் பல பொருள் கூறலாம். ஆனால் நந் தமிழ் மொழியில் அஃது அறம் என்னும்சொல்லினால் வழங்கப்பட்டு வருகின்றது. நிற்க யாதாமொரு வன் யாதொரு பிரதிப்பிரயோஜனத்தையும் கருதாது ஒருவனுக்கு ஒரு பொருளைக் கொடுக்கின்றானோ அதனையே தருமம் என்று கூற வேண்டும்.

ஒருவனிடத்தில் தர்மசிந்தனை யிருக்கவேண்டுமேயானால் அவ னிடத்தில் கருணை அல்லது இரக்கம் என்னும் தன்மை இருத்தல் அவசியம் ஆதலின் தருமத்திற்கு மூலகாரமானயுள்ளது கருணை அல் லது இரக்கம். ஒருவன் ஒரு பொருளைவேண்டி அது கிடைக்காமல் வருந்தும்போது அப்பொருளை அவனுக்குக் கொடுத்து உதவுதலே தருமமாகும்.

தருமத்தை முப்பத்திரண்டு விதமாக நமது பெரியோர் பிரித்தி ருக்கிறார்கள். அவை,

> " கற்றவறு சமயத்தார்க் குணவு கருதும்விலை
> யுற்ற தனித் துயிர்மீட்டல் சிறாருக்குத வனற்பான்
> மற்றுமகப் பெறுவித்தல் சிறாரை வளர்த்தசனம்
> பெற்ற வீவற்றினை யெண்ணான் கறமெனப் பேசுவரே.

அதாவது, அறுசமயத்தார்க்குண்டி அறைவச்சோறு, அறவைப் பிணம் சுடுதல், அறவைத்தூரியம், ஆதுலக்குச்சாலை, ஆவிருஞ்சுதரி, எறுவிடுத்தல், ஐயம், ஓதுவார்க்குணவு, கண்ணாடி, கண்மருந்து, கன்னிகாதானம், காதோலை, சுண்ணம், சிறைச்சோறு, சோலை, தலைக் கெண்ணெய், தண்ணீர்ப்பந்தல், தடம், தின்பண்டம் நல்கல், நாவி தன், நோய்மருந்து, பசுவுக்கு வாயுறை, பிறர்துயர் அகற்றல், பெண் போகம், மகப்பெறுவித்தல், மகவுவளர்த்தல், மகப்பால் வார்த்தல், வண்ணார், விலங்கிற்குணவு, விலைகொடுத் துயிர்காத்தல் என்பவைக ளே இவ்வறங்கள் பலதரப்படினும் பொதுவாய் இரண்டு விதமாகப் பிரிக்கலாம்.

முதலாவது:---தர்மசிந்தையுள்ள ஒருவன் தான் எதிர்பார்த்த எண்ணமாகச் சந்தர்ப்பம் நேருங்காலத்தில் இரக்கத்தோடு செய்யும் தருமம்.

இரண்டாவது:--மானிட ஜன்மங்களுக்கும் மற்ற ஜீவகோடிக ளுக்கும் உதவும் பொருட்டு தடாகம் வெட்டி வைத்தல், கூபம்கட்டி வைத்தல், மார்க்கமண்டபங் கட்டல், மடங்களேற்படுத்தல, தேவா லயங் கட்டல், அன்னச்சாலை வைத்தல், தண்ணீர்ப்பந்தல் வைத்தல்

சுமைதாங்கி நட்டுவைத்தல், பூஞ்சோலை வைத்தல், அவைகளை திருஸ்து செய்தல் முதலியன, இவைகள் என்றென்றும் அழியாத் தன்மையுள்ள தருமங்களாம்.

தருமம் செய்வதில் நமது மனச்சாக்ஷிக்கு விரோதமில்லாமல் பிறர்பொருளை யிச்சிக்காமல் குற்றமற்ற வழியில் பொருளைச் சம்பாதித்து தானும் நியாயமான வழியில் செலவு செய்து தனக்கும் தனது பெண்பிள்ளைகளுக்கும் போக மீதத்தை சத்பாத்திரமறிந்து தருமம் செய்தலேயாகும். அஃதாவது "பாத்திரமறிந்து பிச்சையிடு" எனும் திருவாக்கியத்தைக் கடைப்பிடித்து எவரெவர்கள் அறத்திற்குறியார்களோ அன்னவர்களை அறிந்து அவரவர்கட்கு எச்சமயம் என்னென்ன வேண்டப்படுவனவோ அவைகளை சித்த சுத்தியுடன் ஈசுரார்ப்பணமாய் யளிப்பதே, இதை விளக்கம் செய்ய தெய்வப் புலமை திருவள்ளுவ நாயனாரும்.

"காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது"

எனத் திருவாய்மலர்ந்தருளினர். அதாவது ஒருவன் நடுப்பகலில் பசியால் மெலிந்து நடக்க முடியாமல் பரிதபிக்கும் சமயத்தில் தனவானொருவன் சந்தித்து நீர் நம் வீட்டிற்கு வந்தால் பலவித பலகாரபக்ஷணங்களுடன் அமுதளிப்பேனென்பதிலும் அவ்வேளை ஓர் ஏழைக்கு சிறிது கூழ்வார்த்தலே மேலானதாகும் ஏனெனின் அவன் காலத்தில் உதவி புரிகின்றான். ஆதலின் சம்பத்துள்ள ஒருவன் தினம் ஆயிரம் அதிதிகட்கு அன்னமளித்து அறத்தைச் செய்யினும் சொற்பவருவாயுள்ளவன் ஒரு பிடியாவதிட்டுண்ணல் வேண்டும். ஆனால் உலகிற் பெரும்பாலார் தாம் ஜனித்தது, பொருளைச் சம்பாதித்துத் தானும் தன் பெண்ஜாதி பிள்ளைகளும் உண்டுடுத்தி உறங்குவதற்காக வென்றெண்ணி மிக நாகரீகமாய் உடுப்பதும், உண்பதும் உண்டபின் உல்லாசமாயுறங்குவதும் நிலையற்ற இவ்வுலக போகங்களை யனுபவிப்பதுமாக விருக்கிறார்கள். கடவுளொருவ ருளரெனக் கனவிலும் கருதுவதில்லை நாமெடுத்த ஜன்மம் சாபல்யமாகும் வண்ணம் நாமிவ்வுலகிற்குச் செய்யவேண்டிய கடமையின்னதென நினைவிலும் நினைப்பதில்லை. இவர்கள் நியாயமற்ற வழியாய்ப் பொருளைத்தேடி மண், பெண், பொன் இவைகளைநாடி தேடி யப்பொருளைத் தானுமனுபவியாமல் தானதருமங்களும் செய்யாமல் கடைசியில் காலன்கையிற் சிக்கும்போது, "ஐயோ பணமே கைவிட்டுப் போகுதே" என்பதை நினைந்து அளவிறந்த பணப்புதையலையும், மண், பெண், பொன்னாபரணங்களையும் மற்ற இதர பூஷணங்களையும் வீணே விட்டுப்போகின்றோமே யென்றேங்கி கண்களில் நீர் ததும்பக் கதறிக்கொண்டே அப்பொருள் நினைவாகவே மாண்டு மடிந்து விடுகிறார்கள். இதனால் வரும் பிரயோஜனம் என்னவோ

தெரியவில்லை அறஞ்செய்யாமல் பணத்தையும் இல்லாளையும் பூமியையும் அதிகமாயடைவதனால் யாது பயன்? இம்முப்பொருட்களும் அழியும் தன்மைகள் உள்ளவையல்லவா, ஆனால் சதாகாலமும் அழிவிலாப் பொருளாயும் சர்வலோகநாயகருக்குகந்த பொருளாயுமிருக்கும் தருமம் என்ற பொருளை நாம் சம்பாதிப்பது நமக்கு இன்றியமையாத சாதனம், தருமம் செய்யாமல் பணத்தை மாத்திரம் குவியல் குவியலாக சேமித்து வைப்பதால் யாது பயன். நாம் மரணத்தருவாயிலிருக்கும்போது இந்நிலையற்ற செல்வம் நமக்கு வந்துதவுமா ஒருபோதும் உதவாது. ஆதலால் தருமம் செய்யாதவன் இருந்தென்ன, இறந்தென்ன?

"நடுவூருள் வேதிகைச் சுற்றிக் கோட்புக்க
படுபனையன்ன பலர் நச்ச வாழ்வார்
குடிகொடுத் தகண்ணுங் கொடுத்துண்ணா மாக்க
ளிடுகாட்டு ளேற்றுப் பனை"

பலருமிச்சிக்க வாழ்பவர்கள் நடுவூரின் காய்த்தபனைக் கொப்பாவார். கொடுத்துண்ணாதவர்கள் சுடுகாட்டிலிருக்கும் ஆண்பனைக் கொப்பாவார்கள் என்பதுபோல, ஒருவன் தருமங்களைச் செய்து கொண்டு சத்குணசம்பன்னனாய்த் தன்னில்லறத்தை நடத்துவனேல் அவனுக்கு யாதொரு குறைவுமில்லை "இல்லறமல்லது நல்லறமன்று" என்ற நம் மூதாட்டியின் வாக்குப் பொய்யா, எவ்வித தருமமும் செய்யாது தனக்குள்ளதான பொருளைச் சேர்த்து வைத்துக்கொண்டு தான் மட்டும் திருப்தியாய் வாழ்பவன் காணும் பலனென்ன, பொருளானது ஒருவன் பூதலத்திலுள்ளமட்டுந் தன்னைச் சம்ரக்ஷிக்குமே யொழிய தானிறந்தங் காலத்தில் விளையும் பயனேதேனுமுளதா, இதனாலன்றோ.

"புன்னுனிமேனீர் போனிலையாமை யென்றெண்ணி
இன்னினியே செய்கவறவினை—பின்னினியே
நின்றானிருந்தான் கிடந்தான் தன்கேளலறச்
சென்றானெனப்படுத லான்."

என நீதிவாக்கியம் முழங்குகின்றது ஆதலின் இப்பொழுதே தருமத்தைச் செய்தல் வேண்டும். நாளைப் பார்த்துக் கொள்வோமென நாளைக் கடத்தலாகாது.

"பாலனான பருவம் போம் பன்னு குமாரப்பருவம் போம்
கோலமான தருணம் போம் கோலையூன்றிக் குனிந்தெழுந்து
காலன்மாக் கவனவர்களும் கல்லென்றழுது பேர்மாற்றி
ஏலப்பிணமென் றொருபெயரிட்டு இடுகாட்டிடுத லொருதலையே.

என்பதால் நாளை யென்பதை இப்பொழுதே யென்பதாய்க் கிரகித்துத் தருமஞ் செய்தல் நன்று.

எனவே நாம் இதனின்றும் தெரிந்துகொண்ட தென்னவெனில் யாக்கை நிலையற்றதென்றும் நீர்க்குமிழியை யொத்ததென்றும் இறப்பும் பிறப்பும் இயல்பேயென்றும் நமக்களித்திருக்கும் ஆயுள் மிக அற்பமென்றும் நன்றாக ஊன்றி யோசித்து வயோதிகத்தால் வருந்தாமுன் திரிகரணசுத்தியுடன் "காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்" என்ற நீதியைப் பின்பற்றி நம் வாழ்நாளை வீணாளாக்காது தானதரு மங்களைச் செய்து என்று மழியா இறைவனருளைப்பெற முயல வேண்டு மென்பதே.

சத்தியமே ஜெயம். தருமம் தலைகாக்கும்.

K. R. கணபதி பிள்ளை, சுண்டக்காமுத்தூர்.

## விண்ணப்பக் கடிதம்

என் ஆருயிர் இரஞ்சிதனே!

குருவாகவும், பிதாவாகவும் சென்ற இரண்டு வருடமாக எனக்கும் என் நேயர்களுக்கும் நற்புத்தியை யூட்டி யோங்கிவருவது போல் யென்றும் நற்கீர்த்தியும் நற்செல்வமும்பெற்று எல்லாருடைய மனதையும் கரைத்து தாய்ப்பாஷையை யூட்டி சுயநலத்தைக் கருதுவார்கள் யென்றும் மேலும் இரஞ்சிதனை ஒவ்வொருவரும் நேசிப்பார்களென்றும் நான் ஆவலுற்று என்னால் இயன்ற நான்கு சந்தா நேயர்களைசேர்த்து அனுப்பியிருக்கிறேன். இதைப்போலவே நமது ரஞ்சிதனின் சந்தா நேயர்கள் ஒவ்வொருவரும் தம்மாலியன்றளவு சந்தாதாரர்களை சேர்த்து நம் மருந்துழவி ரஞ்சிதனை ஆதரிப்பீர்களென்று எம்பெருமானை வேண்டிக்கொள்ளுகின்றேன்.

இங்ஙனம்
இரஞ்சிதன் அன்பை என்றும் மறவாத
பொ. பொ. செல்லத்தம்பி,
டிவிஷன் நெ. 7, திருக்கோணமலை, இலங்கை.

## தற்கால மாந்தர்கள்

(438-ம் பக்கத் தொடர்ச்சி.)

தற்கால பெண்டுகள் கெட்டமார்க்கத்தில் பிரவேசிப்பதிற்கும் மேல்நாட்டு நாகரீகத்தில் மூழ்கி இருப்பதற்கு நம் புருஷர்களும் சில தாய்தந்தையர்களும் காரணமாவார்கள் என்று சொல்ல ஞாயமுண்டு. எப்படியெனில் கிறிஸ்துவ பள்ளிக்கூடத்திற்கு அனுப்புவதாலும் அரைப்படிப்பு படிக்கச் செய்வதாலும் கற்றறிந்த கவி

வாணர்கள் காலணுவுக்கு நொண்டிசிந்து, கும்மி முதலியவைகள் இயற்றுவதாலும், நாடகங்களுக்கு ஸ்திரீகளை அனுப்புவதாலும், அவ்விடங்களில் சரித்திரங்களெல்லாம் இச்சையை விருத்தி செய்யும் முறையில் நடப்பதாலும், தரித்திரத்தாலும், புருஷர்கள் ஸ்திரீகளின் ஆதரவு பெறும்பொருட்டு அவர்களை ரோட்டுகளில், ஆப்பம், முறுக்கு, வடை சுட்டு விற்கச்சொல்வதாலும், தானும் சோம்பேறியாய் திரிவதாலும், ஸ்திரீகள், புருஷர்களை தெய்வமாக எண்ணமலிருப்பதாலும் கோஷாவேஷம் போடுவதாலும், (கோஷா ஸ்திரீகளை ஒருவரும் பார்க்க முடியாது ஆனால், தான் எவ்வளவு மனிதர்களையும் பார்க்கலாம் என்றபடி) ஸ்திரீகளின், வாழ்க்கை தடைபட ஹேதுவாகிறது.

∴ தற்கால பெண்மணிகளுக்கு போதிய கல்வி போதிக்காத குறையினல் அவர்களின் கல்வி, வீண்குதர்க்கவாதங்களுக்கும் ஆசைநாயகர்களுக்கு சோர கடிதங்கள். எழுதுவதற்குமே உபயோகப்படுகின்றன. ஸ்திரீகளை தனிவீட்டில் துணையில்லாமல் குடி வைத்துவிட்டு புருஷர்கள் உத்தியோகம் பார்க்க போய்விடுகிருர்கள். இப்படி செய்வதானது ரொம்பவும் கெடுதி விளைவிப்பதல்லாமல் தீயவழியில் பிரவேசிப்பதற்கு வசதி ஏற்படுவதல்லாமல் சில சமயங்களில் ஸ்திரீ புருஷர்கள், தற்கொலை புரிய காரணமாகிறது. காமபுருஷர்களுக்கும் ஸ்திரீகளைக் கெடுக்கும் கெட்ட எண்ணமுள்ள ஸ்திரீகளுக்கும் அவர்களது தொழிலில் ஊக்கம் அதிகம் உண்டாக காரணமாகிறது, (கரைக்கிறவன் கரைத்தால் கல்லும்கரையும் என்றபடி) நல்லெண்ணமுள்ள ஸ்திரீகளும் கெட்டெண்ணமுள்ளவர்களாகி விடுகிருர்கள். சுபம். சுபம்!

ஜாஸ்தி எழுதினல் விரியும் என்று அஞ்சி இத்துடன் முடிவு செய்கிறேன் தவிர பெண்களைப்பற்றி எத்தனையோ பத்திரிகைகளும், மாத, வார, பத்திரிகைகளும், பெண்கள் பக்கம் என்றும் பெண்பகுதி என்றும் எவ்வளவோ தலையங்கங்கள் வைத்து எழுதியவைகளையே நாமும் எழுதுகிறோமல்லாது வேறு ஒன்றும் எழுதுகிறதில்லை. ஆனல் ஒன்றில் எழுதியபடி நடந்தால் நாம் இது எழுதுவதற்கு சிரமப்படவேண்டியதில்லை. இனிமேலாவது மற்றொருவர் எழுதுவதற்கு இடமில்லாமல் இதிலுள்ள குற்றம் குறைகளை நீக்கி குணத்தை கைகொள்ளுவார்களென்று நம் நாட்டு மாந்தர்களுக்கு நம் ரஞ்சிதன் மூலம் தெரிவிக்கிறேன் கடவுள் அருள் புரிவாராக. சுபம்.

R. சுப்பாச்சார்

கட்டப்பள்ளி போஸ்டு, திருச்சி ஜில்லா.

## தந்தைதாய்ப்பேண்

"தந்தை தாய்ப்பேண்" என்பதற்கு தந்தையையும் தாயை யும் காப்பாற்று என்பது பொருள். பெற்றோர்கள் நம்மை சிறுவய தில் எப்படி காப்பாற்றினார்களோ, அதற்கு மேலாக நாம் அவர் களைக் காப்பாற்ற வேண்டும்.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை
செய்ந்நன்றி கொன்றமகற்கு" என்றவாறு

ஒருவன் ஒருவனுக்குச் செய்த நன்றியை மறந்துவிட்டால் அவனுக்கு பிராயச்சித்தமே கிடையாது. ஆகையால் நமக்கு பெற்றோர் செய்த உதவியை மறக்காமல் திரும்ப நாம் செய்ய வேண்டும்.

கீழ்படிதல்—நாம் தந்தை தாய்ச் சொற்கேட்டு அதன்படி நடக்க வேண்டும். எப்போதும் பெற்றோர்கள் தகாத காரியத்தைச் செய்யச் சொல்லவே மாட்டார்கள். பெரியோர்கள் ஒரு காரியத் தைச் செய் என்று சொன்னால், சொன்ன உடனே மனப்பூர்வமாகச் செய்ய வேண்டும். பலதடவை சொல்லி ஒரு தடவை செய்யும் வழக்கத்தை அடியோடு விட்டுவிடவேண்டும். முணுமுணுத்துக் கொண்டுப் பிரியமில்லாமலும் இடுகின்ற காரியத்தைச் செய்தால் அதனால் பிரயோஜனம் இல்லை.

ஏவாமக்கள் மூவாமருந்து—பெற்றோர்கள் ஒரு வேலையைச் செய் என்று சொல்லுமுன் குறிப்பறிந்து செய்யும் பிள்ளைகளே, மரியாதையும் கீழ்ப்படிதலும் வாய்ந்த நன்மக்களாவார்கள்

மரியாதை—பிள்ளைகள் பெற்றோர்களிடத்தில் பேசும்பொழுது மரியாதையுடனும் அன்புடனும் பேசவேண்டும். சிற்சில சமயங் களில் பெற்றோர்கள் பிள்ளைகளை கடுகடுப்போடு பேசிவிட்டால் அதற்கு அவர்களை மீண்டும் கோபிக்கக் கூடாது. பெற்றோர்களை தூஷணமாகவும் பேசக்கூடாது.

"தீயினாற் சுட்டபுண் உள்ளாறும், ஆறாதே
நாவினாற் சுட்ட வடு"

பெற்றோர்கள் தம்மைக்காட்டிலும், அறிவு, செல்வம், கல்வி முதலியவைகளிற் தாழ்ந்திருப்பினும் அவர்களை எப்போதும் உயர்த்தி பேசவேண்டும்.

அன்பு—பெற்றோர்களிடத்தில் கைமாறு கருதாமல் அன்பு ஏற்பட வேண்டும்.

"கதிரவன் புவிமிறை காரிருள் நீக்கலென்?
மரம் செடிகொடிகளும் மலர்களும் மன்னுயிர்க்கு
உரிய காலங்களில் உறுபயன் ஈவதென்ன?

மாங்குயில் முதலிய தீங்குரற் பறவைகள்
நம்செவிக்கின்பம் நல்குவதேனோ
மண், நீர், தீ, வளி, வான் என்றோதும்
ஐம்பூதமும் நலன் ஆற்றுவதென்னோ?"

இவைகள் என்ன பிரதிஉபகாரத்தை உத்தேசித்து இவ் உலகத்திற்கு உதவி செய்து வருகின்றன. அதுபோல் நாமும் பிரதி உபகாரத்தை உத்தேசிக்காமல் பெற்றோர்களைக் காப்பாற்ற வேண்டும். பெற்றோர்களால் நமக்கு என்ன துன்பம் வந்தவிடத்தும் அவர்களை அன்புடன் காப்பாற்ற வேண்டும்.

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்—இந்த வாக்கியத்தில் அன்னையை முதலில் வைத்து சொல்லியதற்குக் காரணம், குழந்தை பிறந்த உடன் அன்னையைக் கண்டுகொள்கிறது. அன்னையின் மூலமாய் தகப்பனையும் கண்டுகொள்கிறது. இதுபற்றியே ஔவையாரும் பிதாவும் அன்னையும்முன்னறிதெய்வம் என்று சொல்லாமல் அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்று சொன்னார். பின்பு தகப்பன்மூலமாய் குருவையும், குருவின் மூலமாய்க் கடவுளையும் தெரிந்துகொள்கிறது. ஆகையால் அன்னையும் பிதாவும் முன்னறிதெய்வம் என்றும், குருவுங்கடவுளும் பின்னறி தெய்வம் என்றும் கூறப்பட்டு இருக்கிறது. ஆகையால் அன்னையும் பிதாவையும் கடவுளாக மதித்து அனுதினமும் போற்றவேண்டும்.

தந்தைசொன் மிக்க மந்திரமில்லை--தந்தை சொல்வதைக்காட்டிலும் வேறு மந்திரம் இல்லை.

உதாரணம்---முற்காலத்தில், சூஸ்திரவண்டிக்கு முன்னால் வழிவிலக்கி என்ற கருவி கிடையாது. அந்த காலத்தில ஒருவன் குறிகாட்டும் தொழிலில் அமர்ந்து இருந்தான். ஒரு நாள் வண்டித்தொடர் (Railway train) வேகமாக வந்துகொண்டு இருப்பதைக் கவனித்துக்கொண்டு இருந்தான். அப்போது ஒரு குழந்தை அந்தப் பாதையின் எதிர்புறமாக தன்னை நோக்கி வருவதையும் கண்டான். அவன் அந்தக்குழந்தையை காப்பாற்றுவதற்கு எண்ணினான். ஆனல் வண்டி வரும்வேகத்தால் அது முடியாமல் போய்விட்டது. வண்டியும் குழந்தை இருந்த இடத்திற்குச் சமீபித்து விட்டது. உடனே குறிகாட்டி "படுத்துக்கொள்" என்று கூறினான். அக்குழந்தையும் படுத்துக்கொண்டது. வண்டித்தொடர் குழந்தையைத் தாண்டினஉடன் போய்பார்க்க, குழந்தை காயப்படாமல் சுகமாய் இருந்தது. அந்தக்குழந்தை தந்தையின் கட்டளையை மறுக்காததால், உயிருடன் பிழைத்தது. அந்தக்குழந்தை உயிர்தப்ப ஓடியிருந்தால் அப்பொழுதே இறந்திருக்கும். ஆகையால் பெற்றோருடைய வாக்கை அமிர்தத்துக்கும் மேலாக கருத வேண்டும்.

மகனுக்கு தகப்பன்மேல் இருக்கும் அன்பிற்கும் தகப்பன் மகனின்மேல் இருக்கும் அன்பிற்கும் ஒரு சிறுகதை கூறுவோம்.

ஒரு காலத்தில் ரோமாபுரியை மூன்று அரசர்கள் கூடி அரசாட்சி செய்தார்கள். இவர்கள் கொடுங்கோல் மன்னர்கள். நல்லோர்க்கு சார்பாக யார் உதவி செய்கிறார்களோ அவர்களை கொலை செய்து வந்தார்கள். இந்த கொடுங்கோல்மன்னர்கள் தவ்வியஸ் வலிஸரே என்ற நீதிவாதியையும் அவரது சகோதரர் குவின்டஸ் வலிஸரோவையும் பிடித்துச் சிரச்சேதம் செய்யுமாறு கட்டளையிட்டு இருந்தார்கள். இதை யறிந்து இந்த இரண்டுபேரும் தப்பி ஓடுவதற்குக் கடற்கரைக்கு வந்தார்கள். குவின்டஸ் என்பவர் பணம் எடுப்பதற்கு வீட்டுக்கு வந்தார். இவர் வந்ததை அந்தக் கொடியவர்கள் எப்படியோ தெரிந்துகொண்டார்கள். குவின்டஸ் இதை தெரிந்துகொண்டு ஒரு இடத்தில் ஒளிந்துகொண்டான். அந்த இடம் மகனுக்குமட்டும் தெரியும். கொலைஞர்கள்வந்து எங்கே உன் தந்தை என்று கேட்க எனக்குத் தெரியாது என்று சொல்லிவிட்டான். மகனை அவர்கள் அநேகவித இம்சைகள் செய்தும் தகப்பனைக் காட்டிக்கொடுக்க வில்லை பின்பு அவனது தேகத்திலிருந்து சிறிது சிறிதாக சதையை கொய்ய ஆரம்பித்தார்கள். பையன் அது பொறுக்கமாட்டாமல் கத்தினன். அப்பொழுதும் அவன், தகப்பனைக் காட்டிக்கொடுக்க வில்லை.

மகன் இம்சைப்படுவதை சகிக்கமாட்டாதவனாய் அவர்கள் எதிரே ஓடிவந்து, என்மகனை விட்டுவிடுங்கள் என்னைக் கொல்லுங்கள் என்று கதறினன். ஆனல் மகன், என்னைக்கொல்லுங்கள் என் தகப்பனைக் கொல்லவேண்டாம் என்று சத்தமிட்டான். உடனே கொலைஞர்கள் இரண்டுபேரையும் கொன்றுவிட்டார்கள்,

இந்தக் கதையானது மகனுக்கு தகப்பனின்மேல் இருக்கும் பிரியத்தையும், தகப்பனுக்கு மகனின்மேல் இருக்கும் பிரியத்தையும் காட்டுகிறது.

தாயைக் காப்பாற்றின ஜப்பானியச் சிறுவர்களுடைய கதையைச் சிறிது கூறுவோம்.

ஜப்பானில் ஒரு ஸ்திரீக்கு மூன்று புத்திரர்கள் இருந்தார்கள். அவர்களுடைய தகப்பன கொஞ்சகாலத்திற்குள் இறந்து போனன். அவர்கள் கூலிவேலை செய்து பிழைத்துவந்தார்கள். அவர்கள் சம்பாதிக்கும் பணம் சாப்பாட்டிற்கு போதவில்லை ஒவ்வொருநாளும் தாய் பட்டினியாய்க்கிடப்பாள். இதை புத்திரர்கள் சகிக்கமாட்டாமல் வருத்தப்பட்டுக்கொண்டு இருந்தார்கள். அத்தேசத்தில் களவு அதிகமாய் நடந்துகொண்டு இருந்தது. திருடர்களை பிடிப்பவர்களுக்கு பரிசு கொடுக்கப்படும் என்று அவ்வூர் அரசன் விளம்பரம் செய்து இருந்தான்.

இதை மூத்தவன் மற்ற சகோதரர்கள் இருவரிடத்திலும் இந்த சங்கதியைச் சொல்லி என்னை திருடன் என்று கட்டிக் கொண்டு போய் அரசனிடத்தில் விடுங்கள். அரசன் பரிசு கொடுப்பான் அதைக்கொண்டு சுகமாய் ஜீவித்து இருங்கள் என்று சொன்னான்.

இரண்டாவது பையன்—நீங்கள் வேண்டாம். என்னையே திருடன் என்று கூட்டிக்கொண்டு போங்கள் என்று கூறினான்.

கடைசி பையன்—நானே சிறியவன் என்றால் ஒன்றும் சம்பாதிக்க முடியாது. ஆகையால் என்னைக் கொண்டுபோங்கள் என்று சொன்னான். அவ்விதமாகவே சிறுவனை திருடன் என்று அரசனிடம் ஒப்பிவித்துவிட்டு பரிசுபெற்று திரும்பும்பொழுது விசனத்துடன் சென்றார்கள். இதை அரசன் கவனித்து அன்று இராத்திரி அவர்கள் வசிக்கும் தெருவழியாய் சென்றார். அவ்விடத்தில் அழுகுரல் கேட்பதைக் கண்டு உற்றுக்கேட்டார். அப்போது அவர்கள் செய்த தந்திரத்தைப்பற்றி பேசிக்கொண்டு இருப்பதைக்கேட்டான். தாயைக் காப்பாற்றுவதற்கு சிறுவர்கள்செய்த தந்திரத்தை நினைத்து சந்தோஷமடைந்தான். மறுதினம் அச்சிறுவர்களை விடுதலைசெய்து திரண்ட ஆஸ்தியையும் கொடுத்தனுப்பினான் என்பது கதை. ஜப்பானியர்கள் 'தந்தை தாய்ப்பேண்' என்ற நீதிவாக்கியத்தை எவ்வளவு தேவாமிர்தமாகக் கொண்டார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். ஆகையால் அவர்களைப்போல் தம்மால் இயன்றமட்டும் பெற்றோர்களைப்போற்றி கடவுளின் திருவடியை அடைவோமாக.

கதையையல்ல கருத்தைக்கொள்ளுங்கள்
குற்றத்தையல்ல குணத்தைக் கொள்ளுங்கள்
பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

அ. சோமசுந்தரம், வத்தலக்குண்டு.

## ஜனபாயி சரித்திரம்

அல்லது

## கடவுளின் நாமமே மோக்ஷசாம்ராஜ்யத்திற்கு வழி.

### முதல் அதிகாரம்.

உலகத்தில் எத்தனையோ இடங்களில் புண்யக்ஷேத்திரங்களிருப்பினும், விசேஷமாக, நம் தாய்நாடாகிய இப்பரதகண்டத்தில் தான் அநேக ஸ்தல க்ஷேத்திரங்களிருக்கின்றன. இவைகளுள் பண்டரிபுரம் என்னும் க்ஷேத்திரம் இருக்கிறது. அவ்விடத்தில் ஸ்ரீ பண்டரிநாதன் ரகுமாயியுடன் கூடி இருந்துகொண்டு பக்தர்களுக்கு இஷ்ட தேவதையாக, வரப்ரஸாதங்களளித்துக்கொண்டு, துயரதுக்கங்களை யகற்றி இன்பசுக மெய்துகொண்டும் இருந்துவருகிறார்.

அப்பண்டரிநாதனைத் தரிசிக்காத கண் என்ன கண்? அப்பண்டரி நாதனுடைய நாமத்தை உச்சரிக்காத நா என்ன நா!!

"ஆகா! பாண்டுரங்கா!! பரமபுருஷா! நித்திய கல்யாணமங்களதாயகா! யான் என்னென்று சொல்லுவேன். நீ எனக்குச் சகல பாக்கியங்களைத் தந்தும், புத்திரசந்தானம் என்னும் பாக்கியத்தைக் கொடுக்கவில்லை. நான் முன் ஜன்மத்தில் என்ன பாபம் செய்தேனோ கருணாநிதியான நீ அதை க்ஷமித்துக்கொண்டு புத்திர சந்தானத்தை அளிக்கக்கூடாதா?" என்று ஓர் பிராம்மணன் ஆழ்ந்த பக்தியிலிருந்தவாறே கதறிகொண்டிருந்தான். பிறகு சிறிது நேரத்திற்குள், பிராமணனின் முன்னால் ரகுமாயி சமேதராக பாண்டுரங்கர் தோன்றி "ஓ! பக்தா! பயப்படாதே. நீ முன் ஜென்மத்தில் ஒரு ஆண்சிசுவை ஹத்தி செய்ததால், இச்சன்மத்தில் நீ ஆண் குழந்தையை படைமாட்டாய்! ஆனால் உன் மனைவிவயிற்றில். ஓர் புத்திரி ஜனிப்பாள். அவள் சர்வலக்ஷணங்க ளமைந்தவளாகவும், பகவத் தியானத்தில் ஈடுபட்டவளாகவுமிருப்பாள்'' என்றுசொல்லிவிட்டு அந்தர்த்தியானமானார்.

குருடனுக்குக் கண்கிடைத்ததுபோல, அப்பிராமணனுக்கு இம்மொழிகள் காதிற்பட்டதும், மிகவும் சந்தோஷமடைந்து, ஆனந்த பரவசனாகி, தன் மனைவியிடம் வந்து உரைக்க, அம்மாதும் அதிக சந்தோஷமடைந்தனள். இப்படியாக பலநாள் சென்றன. பலநாட்கள் மாதங்களாகவே, அம்மாதுக்கு "தன் வயிற்றில் ஓர் புத்திரி உண்டாவாள்'' என்ற அறிகுறிகள் தோன்றின. தோன்றலும், தன் நாயகனோடு இனிய சம்பாஷணைகளைப் பேசுவதும், பகவானை வணங்கலும், ஆதரிப்பதும் தானதர்மங்களைச் செய்வதுமாகிய இச்சுபகாரியங்களிலே கண்ணும் கருத்துமாயிருந்தாள். நாளடைவில், ஒரு சுபதினத்தில் இம்மாது அதிருபலாவண்ணியமான ஓர் பெண்மணியைப் பெற்றாள். பதினோராம்நாள் புண்ணியாவாசன சடங்கு முதலியன முடிந்தபின்னர், அன்றுசாயந்திரம் நாமகரணம் செய்யவேண்டிய வழக்கமாதலால், ஊரிலுள்ளோரை அழைப்பித்து, எல்லோருக்கும் சந்தன தாம்பூலாதிகள் கொடுத்து உபசரித்தவுடன், அந்த இளங்குழவிக்கு "ஜனபாயி" என்ற பெயர் கொடுத்தார்கள். அன்று முதல் இந்தக் குழந்தையை அதிகப் பிரியத்தோடும், நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து வந்தார்கள்.

## இரண்டாம் அதிகாரம்

ஜனபாயிக்கு வயது பத்தாயிற்று. ஒருநாள் இவருடையதாய் தகப்பன்மார்கள் பண்டரிபுரம்போய் பாண்டுரங்கனை சேவித்துவிட்டு வரவேண்டுமென்று எண்ணங்கொண்டார்கள். அவ்வெண்ணப்படியேசென்று திவ்யதரிசனம் செய்தார்கள். ஜனபாயியின் பக்தியை என்னென்றுசொல்வது! ஆகா! இக்காலத்தில் ஜனபாயியின்

வபதிற்கு சமானமாயிருக்கின்ற பெண்மணிகளின் புத்தியை என்னென்று சொல்வது! இதுவும் காலக் கொடுமைதான்.

தனக்கு எப்பொருளும் சொந்தமில்லையென்றும், உற்றார் உறவினர், பெற்றோர் முதலியோர்கள் மாயையினால் உண்டாக்கப்பட்டவர்களென்றும், மோக்ஷசாம்பிராஜ்யத்தையடைய, பண்டரிநாதனுடைய நாமமே வழியென்றும் தீர்மானித்துக்கொண்டாள். தாய் தந்தையர்கள் தங்கள் ஊருக்குத் திரும்புங்காலத்தில், ஜனபாயி அவர்களைப் பார்த்து என்ன சொன்னாள் என்று நினைக்கிறீர்கள்? "ஓ தாயே! ஓ தந்தையே! நீங்கள் என்னைப் பெற்றதற்காக நான் நன்றிபாராட்டக் கடமைப்பட்டவளாயிருக்கிறேன். இருந்தாலும் என் மனமானது, உங்களிடத்திலும் மற்ற முன்னோரிடத்திலும், அன்பு செலுத்துவதற்கு இடம் கொடுக்கவில்லை. பின்னை, என் மனம் எதற்கிடம் கொடுக்கதென்று கேட்பீர்களாகில், அதற்கும் பதிலளிக்கச் சித்தமாயிருக்கிறேன். என் மனமானது பண்டரிநாதன்மேல் சென்றுவிட்டது. அவரைத்தான் நான் நம்பியிருக்கிறேன். தாயும் தந்தையும், உற்றாரும் உறவினரும், எம்பெருமான்தான். ஆதலால், நான் அவரைவிட்டு வரமாட்டேன்" என்று பிடிவாதமாகச் சொல்லிவிட்டாள்.

(தொடரும்)

S. N. கோபாலகிருஷ்ணய்யர்,
உபாத்தியாயர், பொங்களூர்.

## சுலோசனை

(435-ம் பக்கத் தொடர்ச்சி)

ல: [தனக்குள்] துஷ்டன்விடுத்த கணை, சூலம், கட்கம், முஸலம் என்ற நானாவிதங்களாய்ப் புறப்படுகின்றதே! வானரர்கள் நடுங்குகின்றனரே! இதோ இந்த ஆஸ்திரத்தைத் தொலைக்கின்றேன் (பிரதியஸ்திரத்தினாலதை நாசமாக்குகின்றனர். மீண்டும் தனக்குள்) இனி தாமதிப்பதில் பிரயோசனமில்லை. இவனை முடிப்பதற்கான அஸ்திரத்தைப் பிரயோகிக்கிறேன். (பிரகாசமாய்) அடா, துஷ்டா! நீ எந்தா இந்திரனை வென்று இந்திரஜித்தென பெயர் வாய்ந்திருப்பதாய் வீண்கர்வங் கொள்ளவேண்டாம். நின் சாமர்த்தியம் ஒன்றும் இனி பயன்படாது, படாது!

தென்னு தமிழுக்குதவு சீலன்-என்ற மெட்டு.

" தேவர்களையே வதைக்கும் பித்தே கொண்ட
தீரனாய்ப் பிறந்த யிந்த்ர ஜித்தே வுன்றன்

தேவரையு முறித்து கெட்ட பேரையுமழிக்க கணை
நானே விடுவேனே ':

இதோ பார் நின் சிரமறுந்து கீழே விழும்படியான தேவாஸுர யுத்தத்தில் விருத்திராஸுரனைக் கொன்ற 'ஐந்திராஸ்திரம்'. இதையே யபிமந்திரித்து விடுகின்றேன். நின் சிரஸைக் கொய்வதற்காகவே அகத்திய மாமுனிவரா லளிக்கப்பெற்ற மகாஸ்த்ரம் [அதை வில்லிற் றெடுத்து அடியிற் கூறுமாறு அபிமந்திரித்து]

" தர்மாத்மா ஸத்யஸந்தஸ்ச ராமோ தாசரதிர்யதி
பௌருஷேச்சாப்ரதி த்வந்த்வ: சரைளம் ஜஹிராவணிம்."

என்று வான்மீகியும்,

" மறைகளே தேறத்தக்க வேதியர் வணங்கற் பால
இறையவ னிராம னென்று நல்லற மூர்த்தி யென்னின்
பிறையெயிற் றிவனைக்கோறி யென்றொரு பிறைவாய் வாளி
நிறையுற வாங்கி விட்டா னுலகெலா நிறுத்தி நின்றான்.

என்று கம்பரும் விதந்திருக்கிறபடி

'தசரத குமாரனான ஸ்ரீராமன் தர்மாத்மாவும், ஸத்யவானும், பராக்ரமத்தில் தமக்கெவரும் நிகரில்லாதவருமா யிருப்பது உண்மையே யானால் இக்கணை இந்த மேகநாதனை [இந்த்ரஜித்தை] ஜயிக்கக் கடவது.''

என்று சத்ருவின் சிரஸைக் குறிவைத்து சிரமறுப்பட்டுக் கீழே விழும்படி விடுத்தனர் அந்த திவ்விய சரமானது அண்டபகிரண்டமும் கிடுகிடென நடுக்கமுற, உலகிலுள்ள ஜீவகோடிகள் பயந்து மூர்ச்சிக்கும்படியான கோரமான சப்தத்துடன் வில்லினின்றுங் கிளம்பி சத்துருவின் சிரஸைநோக்கிச் சென்றது.

மே: (தனக்குள்) வீராவேசத்துடன் செவிகள் செவிடுபடும்படியான சப்தத்துடன் கூடியதும், கண்களைப் பறித்துக்கொண்டு போகக்கூடிய மின்னலையொத்த பிரகாசத்துடன் கூடியதும், எனக்கு திவ்வியலோகத்தை யளிக்கக் கூடியதுமான இந்த பாணமானது என் உயிரைப் போக்காமல் விடாது, விடாது! இதை வெல்லுவதற்கான பிரதியஸ்திரமும் இப்பொழுது என்னிடமில்லை. [யோசித்து தத்வமின்னதென வுணர்ந்து] ஆதலால் சுலோசனையின் விருப்பத்தின்படி ஷாட்குண்ய பரிபூரணராய், ஆபத்பாந்தவராய், தீனபந்துவாய், நீலமேக சியாமள வர்ணராய் விளங்கிக் கொண்டிருக்கும் ராமச்சந்த்ர பரமாத்மாவை என் மனத்தினிலிறுத்தி தியானித்துக்கொள்கிறேன் (கண்களை மூடியபடி தியானித்தல்) அவருடைய கிருபையினாலும், சுலோசனையின் கற்பின் மகிமையினாலும், இப்போ தென்னைக் கொல்லவரும் இந்த சரமானது என் சிரஸைக்கொய்து ஸ்ரீராமச்சந்திர பாதாரவிந்தத்திலும்,

எனது வலக்கரத்தைக் கொய்து என்னுடைய பிரிவை யாற்றமாட்டாது வருந்திக்கொண்டிருப்பவளும், சதாசர்வகாலமும் அசிந்திய ரூபனும் அப்ரமேயனும் சச்சிதானந்த சுவரூபனுமிருக்கும்ராமனையே த்யானஞ் செய்துகொண்டிருப்பவளுமான சுலோசனு தேவியின் அந்தப்புரத்தி லமைக்கப்பட்டிருக்கிற நிலமுற்றத்திலும் கொண்டு போய் சேர்க்கக் கடவது. [கண்களை மூடிக்கொண்டு பகவத்யான பரனுயிருக்கின்றனன்.]

அப்பொழுது ஆகாயத்திலிருந்து ஒரு சப்தங்கிளம்புகின்றது. லக்ஷமணன் முதலாயினோர் அதை யென்னவென்று உயர வண்ணாந்து பார்த்தபடி கவனிக்கலாயினர்.

அசரீரி: (திரைக்குப் பின்னல்)

ஜயவிஜயீபவ, லக்ஷமண! பேஷ்! பேஷ்! தேவாஸுர யுத்தத்தில் இந்த்ரன் விருத்திரனை வென்றதுபோல் இந்த்ரஜித்தை நீர் ஜயித்தீர். அவனுடைய சிரஸை நம்மால் விடுக்கப்பட்ட ஐந்திராஸ்த்ரம் கரகரவென்று அறுத்துக்கொண்டு போய்விட்டது. ஆச்சரியம்! ஆச்சரியம்!!

[ஆகாயத்தில் தேவதுந்துமி முதலாய வாத்யங்கள் முழங்கின. விண்ணவர்கள் புஷ்பமாரி பொழிந்தனர்.]

ல: [விபீஷணராதி தம் சைன்யங்களை நோக்கி] மித்ரர்காள்! இன்று சத்ருஜயம் ஸ்ரீ ராமச்சந்த்ரன் கிருபையால் தான்; செல்வோம் ராமசன்னிதானம்.

[எல்லோருஞ் சந்தோஷமாய்ச் செல்லுகிறார்கள்.]

(இன்னும் வரும்)

துறையூர் மா. சுப்பராமய்யர்.

## சாந்தவதி

[421-ம் பக்கத் தொடர்ச்சி]

சுரங்கத்தினின்று வெளிவந்த வெள்ளை ஸ்திரீயையும் கிழமாதையும் விட்டுப் பிரிந்து வந்த அப்பெண்ணானவள் அவ்விடத்தைவிட்டு நீங்கி வரும் வழியில் வேறிடத்தில் சுணங்காமலும் அக்கம்பக்கத்தில் திரும்பிப்பார்த்து காலத்தைப் போக்காமலும் நேராக தான் முன்னிருந்த யிடத்திற்குவந்து கொஞ்சநேரம் வரையில் அவ்விடத்திலேயே நின்றுகொண்டிருந்தாள். அப்பொழுது தான் கிழவியுடன் போய்வந்ததைப்பற்றி தனக்குள்ளே யோசிக்கலானாள். நாம் முன் நம்மிடம் வந்துள்ள சிம்மங்களிரண்டைப் பற்றியும் அவைகளால் அளிக்கப்பட்ட கடிதத்தைப்பற்றியும் வியப்புறலானோம்.

அதைப் பார்க்கிலும் இதற்கு சற்றுமுன்னதாகக் கண்ட காக்ஷியனது யென்றும் கேளவிப்படாத புதுமையாயிருப்பதுடன் திகிலேடும் பெரும் அச்சத்தையுமுண்டாக்குகின்றது. ஏனெனில் முன்னோர்கள் காலந்தொட்டு இக்காலங்களிலும் சுரங்கமென்றால் இராஜாக்களுக்கோ சீமான்களுக்கோ உள்ள அந்தரங்கஸ்தானம் என்றும் அதுவும் ஓர் கட்டிடத்தை அனுசரித்து ரொம்பதொலைக்கி போகாமல் கட்டப்பட்டிருக்குமென்றும் மறைவாயுள்ள காரியங்களை அங்கு செய்வதுடன் விலைப்பெற்ற பொருள்களையும் வைத்திருப்பார்களென்றும் அதில் குறிப்பிடும் வேலையின் நேரந்தவிர, மற்ற காலங்களில் அங்கிருக்க முடியாதென்றும் அப்படி ஒருவாறிருக்க வேணுமென்றாலும் கஷ்டத்தை கொடுக்குமென்றும் அநேகர்சொல்ல கேட்டிருக்கிறோம்.

அவ்வாறிருக்க நாம் இப்பொழுது கண்ட சுரங்கமானது அவ்வாறன்னியில் கட்டிடங்களில்லாத யிடத்தில் சமதரையிலிருக்கின்றது. அதிலும் வெகு ஆழத்தில் அதிகதூரம் வரையில் கட்டப்பட்டிருப்பதாக புலப்படுகின்றது. அதனுள் மனிதர்கள் நடமாடும் அரவமும் பேசிக்கொள்ளுந் தொனிகளும் கேட்பதால் அங்கு அநேகம் மனிதர்கள் வசித்து வருகிறார்கள் போல் தோற்றப்படுகின்றது. அதுவுமன்னியில் அதற்குள்ளிருந்துவந்த வெள்ளை ஸ்திரீயும் கொஞ்சம் அச்சத்துடன் வந்ததைப்பார்க்க சந்தேகத்திற்கு இடமுண்டாகிறது.

நம்முடன் வந்து வார்த்தையாடி ஒத்தாசை செய்கிறேனென்று அழைத்துசென்ற கிழமாதையும் நம்மைப்போன்ற சாமான்யமானவளென்று நினைத்திருந்தோம். வரவர அவளுடைய செய்கைகளினின்றும் அவளொரு பலத்த கைகாரியென்று விளங்குகின்றது.

அந்த சுரங்கத்திலிருக்கிறவர்களெல்லாம் கள்வர்கூட்டத்தாரை சேர்ந்தவர்களாகவே யிருக்கவேண்டும். அப்படிக்கிராவிடில் அதற்குள்ளிருந்து தைரியமுடன் வெள்ளை ஸ்திரீ வெளி வரவும் அங்கு மனிதர்கள் நடமாடவும் மார்க்கமில்லை. அத்துடன் அங்கிருக்கும் அந்தரங்க கூட்டத்தார்கெல்லாம் கிழமாதும் வெளியில நடக்கும் காரியங்களை பார்த்துரைக்கும் தூதனாகவேயிருந்து வருகிறார்களென்பதாய் யோசிக்கவேண்டியதிருக்கிறது. அவ்விதம அவர்களுக்கிவள் ஒத்தாசைக்காரியா யிருக்காவிட்டால் யிவள்போய் பூமியை காலால் மிதித்த மறுநிமிஷமே சுரங்கம் திறக்க காரணமில்லை.

இந்த நந்தவனத்தின் உள்பாகத்திலேயெ அந்த பாதாள சுரங்கமானதிருப்பதால் நந்தவன எஜமானனே கட்டியிருப்பானேயென்ற சந்தேகமொன்று ஊடாடுகின்றது. அப்படி அவனுக்கு சொந்தமான கட்டிடமாயிருந்தால் நாம் இவ்விடத்திற்கு வந்து எவ்வளவோ நாளாகிறது. இதுவரையில் ஒருவராவது அதில் நடமாடியதாய்க் காணப்படவில்லை. அந்த கிழவியும் நம்முடன் வார்த்தையாடும்போதெல்லாம் ரகசியமாகப் பேசி வந்ததினாலும் சுரங்கத்தைப்பற்றி மர்மமாக

சொல்லி வந்ததை யோசிக்க நந்தவன எஜமானுக்கு சொந்தமில்லை யென்றும் அவனுக்கு தெரியாமலே முன்னோர்கள் காலத்திலிருந்து வருகிற தென்பது நன்கு புலப்படுகின்றது. அங்கிருந்து வெள்ளை ஸ்திரீயும் நம்மை அழைத்துச்சென்ற கிழமாதும் நாளை வாவென்று சொன்னார்களே எதற்காக அப்படி சொன்னார்கள் அவர்களால் நமக்கு ஆபத்து நேர்ந்தாலும் நேரலாம். அப்படிதானிருக்க வேண்டும். அவ்வித மில்லாவிடில் இன்றைக்கே நமக்குள்ள குறையை கேட்கக் கூடாது. அவர்களும் ஏதோ மாம்மத்தை மனதில் நினைந்தபடியால் தான் நாளை வா யென்றார்கள். அதற்கு சந்தேகமில்லை யிதைப்பற்றி யேன் யிவ்வளவு தூரம் யோசிக்க வேண்டும். யென்றைக்கிருந்தாலும் ஒரு நாளைச்கி சாகவேண்டியது தானே. நாம் தான் யாரு மற்ற பேதையாகி விட்டோம். அவர்களால் உயிருக்கு அபகேடு நேர்ந்தாலும் நமக்கு நல்லதே. இருந்து கஷ்டத்தை யனுபவிப்பதை பார்க்கிலும் சவ்தியில் போவது மிகுசிலாக்கியமே. அவர்கள் வரச் சொன்ன பிரகாரம் நாளையதினம் அங்கு சென்றால் எல்லா விஷயங்களையும் நேரில் தெரிந்து கொள்ளலாம் அல்லது அவர்கள் நம்மை வரச்சொல்லி பொல்லாங்குஞ் செய்ய ஒருவர் நினைப்பார்களானால், நாமென்ன அரசகுமாரியில்லையா கடுகு சிறுத்தாலும் காரம்கெட்டு போகுமா கேவலஸ்திதியில் வந்துவிட்டாலும நமக்குள்ள தைரியமும் போய்விட்டதா உயிருள்ள மட்டும் இயன்றவரையில் பார்க்கிறது. முடியாத காலத்தில் யெப்படியானாலும் சரி யென்று நினைந்து கொண்டவளாய் வெகு தைரியத்துடன மனத்தில் கொஞ்சம் சஞ்சலம் நீங்கி சுரங்கத்தின் விஷயத்திலேயே புத்தியை செலுத்தினவளாய் நின்று கொண்டிருந்தாள்.

அப்பெண்மணியாவாள் தனக்குள்ள சோகத்தையும் சுரங்கத்தின் விஷயத்தில் தைரியமாய் யோசனையில் ஆழ்ந்துநின்றது ஓர் ஆச்சரியமில்லை. ஏனெனில் சாதாரணமான மனிதர்கள் ஒன்றை தெரிந்து கொண்டால் அதின் அந்தரங்க விஷயத்தைக் கண்டுகொள்ளும் வரையில் பெரு முயற்சி செய்துவருகிறார்கள் அதுவிஷயத்தில் தங்களுடைய உயிரை ஒருதுரும்பாய் மதித்து வேலைசெய்வார்களென்றால் அரசன் குமாரியாகிய இம்மாது யோசித்ததைப் பற்றி நாம் அதிகஞ் சொல்லவேண்டியதில்லை.

நாழிகையும் பத்துக்கு மேலாகிவிட்டபடியால் இனி நாம் இங்கு தனிமையில் நின்றுகொண்டிருந்தால் ஏதாவது சங்கடம் நேர்ந்தாலும் நேரக்கூடும். அல்லது யாராவது கண்டால் தூர்ச்செய்கையான கெட்ட யெண்ணத்தை நினைப்பார்களென்று தனக்குள் யோசித்தவளாய் அவ்விடத்தினின்று நீங்கி முன்சொன்ன கட்டிடத்தை நாடி விரைந்து சென்று அங்குள்ள கட்டுக் காவல்களை யெல்லாம் கடந்து நேராக அந்த கட்டிடத்திற்குச்சென்று தனக்கேற்பட்டிருக்கும் அறைக்குப்போய் உள் தாழ்ப்பாளைப் போட்டுக்கொண்டு அங்கிருந்த விளக்

கண்டையில் சிங்கங்களால் கொடுக்கப்பட்ட கடிதத்தைபிரித்துப் பார்த்தாள். அதில் கீழ்கண்டவிதம் வரையப்பட்டிருந்தது.

### கடிதம்

ஸ்ரீமதி அன்பார்ந்த அம்மா அவர்களுக்கு சிறுவனாகிய நான் யெழுதிகொள்ளும் விஞ்ஞாபனம் க்ஷேமம் க்ஷேமங்களுக்கு தங்களுடைய லிகிதத்தை வெகு ஆவலுடன் யெதிர்ப்பார்க்கிறேன். இப்பவும் தங்களின் காதலருக்கு அன்பரும் யென் நேசருமாகிய மதுராகனு மந்தசிங்கென்பவர் தங்களின் பெற்றோர்கள் சகோதரர்கள் காதலர் முதல் யாவர்களையும் பகைவர்கள் யெங்குகொண்டு போய் யென்ன ஸ்திதியில் வைத்திருக்கிறார்கள் யென்பதை கண்டு ஒத்தாசை செய்வதற்காகவும் நம் யெதிரிகள் இன்னார்தான் யென்பதை எளிதில் தெரிந்துகொண்டு அவர்களின் முயற்சிகளை தடைப்படுத்துவதற்காகவும் வெளியூர்களுக்கு போய் பத்து நாளாகிறது. இன்னும் வரவுமில்லை ஷை யாரிடமிருந்து யாதொரு விஷயமும் தெரியவில்லை. அவருடைய தாக்கல் தெரிந்த பின் தங்களுக்கு விவரம் தெரிவிக்கிறேன் தாங்கள் அரண்மனையிலிருந்து காணாமற்போன நாள் முதல் நேற்றையதினம் வரையில் நீங்களிருக்கும் இடம் புலப்படாமல் கவலையுற்றோம். ஈஸ்வரன் கிருபையால் நேற்றுதினம் அவ்விடத்திலிருப்பதாக கேள்வியுற்றேன். அதின்மேல் இந்த கடிதம் வரையலானேன். தங்களுடைய குடும்பத்தார்களை அரண்மனையிலிருந்து அகற்றியது மன்றியில் தங்களையுங் கொண்டுபோய் சிறையிலடைத்த தன்மையாய் வைத்திருக்கும் பாவிகளுடைய கெட்ட செய்கைகளுக்கு இனிமேல் கொஞ்சங்கூடப் பயப்படவேணுமென்ற அவசியமில்லை. நாங்களும் தங்களுக்கு பக்கத்திலிருந்து துணைபுரிகிறோமென்று மனக்கலக்கமில்லாமல் தைரியமாயிருந்து வரவேண்டியது. தங்களையும் அவ்விடத்தில் நின்று நீக்கவேண்டியதற்கான முயற்சி செய்து வருகிறேன். என்னையும் இன்னாரென்பது தங்களுக்கு தெரியாது. அதனால் இந்த கடிதத்தை பார்த்து யேதாவது தீங்குகள் நேருமோ வென்று மிரளவேண்டாம். இந்த லிகிதம் கொண்டு வருகிற சிம்மங்களிரண்டும் நம்முடையதே அவைகளை கண்டு பயப்படவேண்டரம். ஷை சிம்மங்களிடம் பதில் சமாசாரம் அனுப்பினால் என்னிடம் வந்து சேரும் தாங்களும் யெதுவந்தாலும் அனுபவிப்போமென்று அதிக கவனமாக இருந்து வரவேண்டியது.

இப்படிக்கு தங்களின் நன்மையை கோரும் ஊழியனாகிய மணிகாரன்.

(இன்னும் வரும்)

நா சுப. சுவாமினாத உபாத்தியாயர்
பக்தகவி ஜோதிடர், மாந்தளை, பர்மா.

## மதிப்புரை

தோத்திரட்டு—இஃது இரங்கோன் தனவைசிய இளைஞர் தமிழ்ச்சங்கத்தினரால் நமது பார்வைக்கு அனுப்பப்பட்டது. இதில் 64 பிரபந்தங்களிலிருந்து தொகுக்கப்பட்ட தோத்திரங்களும் சிவன், பார்வதி, விநாயகர், சுப்பிரமணியர், நால்வர் முதலியவர்களைப் பற்றிய தோத்திரங்களும் தேவார திருவாசகங்களும், லட்சுமி, ஸரஸ்வதி ஸ்தோத்திரங்களும், விஷ்ணுஸ்தோத்திரமும், நாமராமாயணம் முதலியனவும் காணப்படுகிறது. இந்நூல் சைவர்களுக்கு இன்றியமையாததென்பது பொருத்தம். இது நல்ல கிளேஸ் கடிதத்தில் டபிள் கிரௌன் 16 பக்க அளவில் 192-பக்கங்களுடனும், முதற்பக்கத்தில் ஸ்ரீ நடராஜ சிவகாம சுந்தரியின் திருவுருவங்களடங்கிய படமும் அமைக்கப்பட்டிருக்கின்றது. இதிலுள்ள செய்யுள்கள் மிகவும் செழுமையானதாயும் அறிவை வளர்க்கக் கூடியதாயுமிருக்கிறது. புத்தகம் 1-க்கு விலை ரூ, ஒன்று. வேண்டியவர்கள் இரங்கோன் 29-வீதியில் 86-வது கிருஹத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் தனவைசிய இளைஞர் தமிழ்ச்சங்கத்துக் கெழுதிப் பெற்றுக் கொள்ளவும்.

---

## சந்தாநேயர்களுக்கு விண்ணப்பம்

மார்ச்சுமாதம் முதல்தேதி நமது இரஞ்சிதனின் சந்தாதாரர்களுக்கு இரஞ்சிதபோதினி காலண்டரை புக்போஸ்டில்—Bearing ஸ்டாம்பு ஒட்டாமல் அனுப்புவோம். நேயர்கள் ஒரு அணா கட்டிப் பெற்றுக்கொள்ள வேண்டுகிறோம். முத்திரை யொட்டியனுப்பினால் இடை வழியில் களவு போகுமென்பதை யொட்டியே இவ்விதம் செய்வதனால் நேயர்கள் மனத்தாங்கலடையாதிருக்கக் கோருகிறோம்.

பத்திரிகாசிரியர்.

---


# 1924௵ பிப்ரவரி௴ முதல் 1925௵ ஜனவரி௴ வரையுள்ள கலிகோ பைண்டான

# ரஞ்சித போதினி

## புத்தகம் 1-க்கு விலை ரூ. 1-4

இரஞ்சித போதினி ஆபீஸ், சவுகார்பேட்டை போஸ்டு மதராஸ்.

## இரஞ்சித போதினியின் இரக்தாக்ஷி வருஷத்திய
## திருக்கணித சர்வ முகூர்த்தப் பஞ்சாங்கம்

கலியுகாதி 5026—சாலிவாகனம் 1847—பசலி 1333—ஹிஜரி 1342
கொல்லமாண்டு 1099-1100—இங்கிலீஷ் 1925ஹு

| மாசிமீ | பிப்ரவரிமீ மார்ச்சுமீ | வாரம். | திதி | நக்ஷத்திரம் | அமிர்தாதி யோகம். | விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 12 | வி | சது 59.35 | உத் 17.18 | ம 17.18 சி | விஷ்ணுபதிபுண்யகாலம் |
| 2 | 13 | வெ | பஞ் 68.33 | அஸ் 18.43 | அ 18.43சி | சுபமுகூர்த்தங்கள் |
| 3 | 14 | சனி | சஷ் 56.35 | சித் 18.55 | ம18.55அ | கதிரறுக்க |
| 4 | 15 | ஞாயி | சப் 53.20 | சுவா 18.8 | சி18.8ம | சர்வமுகூர்த்தங்கள் |
| 5 | 16 | திங் | அ 49.8 | விசா16.8 | ம16.8சி | அஷ்டகசிராத்தம் |
| 6 | 17 | செ | நவ 43.53 | அநு 13.13 | சி13.13ம | இராமதாஸ் நவமி |
| 7 | 18 | புத | தச 37.53 | கே 9.18 | சி9.18ம | வியாதியஸ்தர் குளிக்க |
| 8 | 19 | வி | ஏ 31.10 | மூல4.40 | சித் 60 | சர்வத்ர ஏகாதசி |
| 9 | 20 | வெ | து 24.0 | பூரா 2.3<br>உத் 54.5 | பி 2.3 சி | திலதுவாதசி |
| 10 | 21 | சனி | திர 16.40 | திரு 48.43 | சித் 60 | மஹாசிவராத்திரி |
| 11 | 22 | ஞாயி | ச ● 9.35 | அவி 43.35 | ம43.35சி | அமாவாசை |
| 12 | 23 | திங் | அமா 2.55<br>பிர 57.28 | சத 39.15 | சி 39.15 | பால்குணசுத்தம் |
| 13 | 24 | செ | துதி 52.38 | பூரட் 36.3 | ம 36.3அ | சந்திர தரிசனம் |
| 14 | 25 | புத | திரி 49.38 | உத் 34.10 | சி34.10ம | சர்வமுகூர்த்தம் |
| 15 | 26 | வி | சது 48.15 | ரே 33.55 | சி33.55அ | கரிநாள் |
| 16 | 27 | வெ | பஞ் 48.45 | அசு 35.35 | அ35.35சி | கரிநாள் |
| 17 | 28 | சனி | சஷ் 51.13 | பர 39.8 | சி39.8அ | கரிநாள் |
| 18 | 1 | ஞாயி | சப் 55.20 | கி * 44.15 | சித் 60 | கிருத்திகை |
| 19 | 2 | திங் | அ 60. | ரோ50.50 | அ 60 | யாத்திரை விலக்க |
| 20 | 3 | செ | அ 0.50 | மிரு 58.15 | சி58.15ம | மேற்படி |
| 21 | 4 | புத | நவ 7.3 | திரு 60. | சித் 60 | |
| 22 | 5 | வி | தச 13.40 | திரு 6 | மர 6.0 அ | |
| 23 | 6 | வெ | ஏகா 19.58 | புன 13.25 | சி 13.15 ம | சர்வ மத்வ ஏகாதசி |
| 24 | 7 | சனி | து 25.20 | பூச 20.10 | சி20.10 ம | நரசிம்ஹ துவாதசி |
| 25 | 8 | ஞாயி | திர 29.33 | ஆயி 24.50 | சி 24.50 ம | நவக்கிரகசாந்திசெய்ய |
| 26 | 9 | திங் | சது 32.15 | மக 29.55 | ம 29.55 சி | மாசிமகம், காமதஹனம் |
| 27 | 10 | செ | ○ 33.38 | பூர 32.43 | சி32.43 அ | பௌர்ணமி |
| 28 | 11 | புத | பிர 33.30 | உத் 34.15 | அ34.15ம | அவமாகம் |
| 29 | 12 | வி | துதி 32.90 | அஸ் 34.38 | சித் 60 | தானியம் அறுக்க |
| 30 | 13 | வெ | திரி 30.3 | சித் 33.53 | சித் 60 | மீனரவி 42.50 ஷடசீதி புண்யகாலம், சர்வமுகூர்த்தம் |